பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 28 திங்கட்கிழமை 13.03.2023 கதிர் 124

# நடக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிடவில்லை

## சுமந்திரன் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு போட்டியிட வில்லை எனத் தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ரெலோ மற் றும் புளொட் அமைப்புக்களே ஏற்படுத்தப்பட்ட இணக்கப்பாட்டை மீறிச் செயற்படுவதாகவும் குற் றஞ்சாட்டியுள்ளார்.

யாழிலுள்ள அவரது அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்று இருபகுதியனரும் உரிமைகோரி வரும் நிலையில், யார்தான் உண்மையில் கூட்டமைப்பு என்று செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். பதிலளித்த சுமந்திரன் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு என்பது 2001 ஆம் ஆண்டிலே உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு. அது பதிவு செய்யப்பட்ட ஓர் அரசியல் கட்சி அல்ல. ஆனால் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் சேர்ந்து கூட்டமைப்பாக இயங்குகிற போது தேர்தல்கள் திணைக்களத்திற்கு அதைக் குறித்து அறிவித்தல் கொடுக்க வேண்டும். அப்படியான அறி வித்தல்களை நாங்கள் கொடுத்தி ருக்கிறோம்.

அந்தக் கூட்டமைப்பில் வெவ்வேறு தருணங்களில் வெவ்வேறு கட்சிகள் இருந்தி ருக்கின்றன. தற்போது இலங்கை தமிழரசுக் கட்சி மற்றும் ☞2



## இது ரகசியம் அல்ல!

பாவியர் போகும் இடமெல்லாம் பள்ளமும் திட்டியும் என்பதைப் போல யாழ்ப்பாணம், மாநகர சபை முன்னாள் முதல்வர் இ.ஆனல்ட் செல்லும் இடமெல் லாம் பிரச்சினையும் குழப்பமும்தான். பத விக் கதிரையைவிட்டு இறங்கமாட்டேன் என்றும், அடுத்தவருக்கு இடத்தைக் கொடுக்கமாட்டேன் என்றும் அவர் அடம் பிடிப்பதன் காரணமாக எல்லையில்லாச் சிக்கல்கள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன.

புதிய சிக்கல் உதைபந்தாட்ட சங்கத்தின் மூலமாக வந்திருக்கிறது. இலங்கை உதை பந்தாட்டச் சம்மேளனத்தில் சிங்களவர்கள் இரு பிரிவுகளாகப் பிரிந்து நிற்க இந்தத் தடவை இரு தமிழர்களைத் தலைமைப் பதவிக்கு நிற்க வைத்த விடயங்களை முன்னொருபோது விரிவாக விளக்கியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அப்படி தலைமைப் பதவிக்கு நிறுத்தப்பட்டவர்க ளில் ஒருவர் ஆனல்ட் மற்றவர் ரங்கா. கடைசியில் ரங்கா வெற்றி பெற்றார்.

நேற்று யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் நிர்வாகத் தெரிவு நடந்தது. அதனை மேற்பார்வை செய்ய கொழும்பில் சம்மேளத்தில் இருந்து ஆட்கள் அனுப்பப் பட்டிருந்தார்கள். சம்மேளனத் தலைமைப் பதவிக்கான எதிராளி அல்லவா, அதனால் தற்போதைய தலைவருகக்கும் இந்தத் தெரிவில் அதிக இஷ்டம் இருந்திருக்கும் போலும். அவர் ஆட்களை அனுப்பி வைத்தி ருக்கிறார். ☞2

# விமான நிலையத்தில் சிக்கிய மஹிந்தானந்த

## வெளிநாட்டுப் பயணம் இரத்து



முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே வெளிநாடு செல்வதற்காக நேற்றுமுன்தினம் (10) இரவு கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்ற போது, அவர் வெளிநாடு செல் வதைத் தடுக்கும் வகையில் குடிவரவு - குடியகல்வு கட் டுப்பாட்டு அதிகாரிகள் செயற் பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத்துகம நீதிமன்றத்தில் அவருக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட் டுள்ளது எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. ☞2

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது மிக முக்கியம்

## அமெரிக்கத் தூதுவர் வலியுறுத்து

உள்ளூராட்சி மன்றங்க ளுக்கான தேர்தலை நடத்து வது மிக முக்கியம் என்று இலங்கைக்கான அமெரிக் கத் தூதுவர் ஜூலி சங் வலி யுறுத்தியுள்ளார்.

'நெருக்கடி ஊடாக பய ணிக்கும் போது சட்டத் துறையின் பொறுப்பு' என்ற தொனிப்பொருளில் இந்த ஆண்டுக்கான தேசிய சட்ட சம்மேளனம் ☞2

# ஆணைக்குழு பதவிக்கு மீண்டும் விண்ணப்பம்

## தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவிப்பு

தேர்தல்கள் ஆணைக் குழுவில் மீண்டும் அங்கத்து வம்பெறுவதற்குதற்போதைய தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா மீண்டும் விண்ணப்பித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல்சட்டம் தொடர்பாக நான் உள்ளிட்ட தற்போதைய ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட பல சட்ட மூலங்களை நிறைவேற்ற வேண்டியுள்ளது. ☞2


# அடுத்த ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல்

## பொது வேட்பாளராக ரணில் 'மொட்டு'வும் பச்சைக்கொடி

**அடுத்த வருடம் ஜனவரி மாதம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாட்டை அரசு செய்து வருகின்றது என அரச உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**இதற்காகத்தான் உள்ளூ ராட்சி சபைத் தேர்தலை அரசு ஒத்திப்போடுவதற்குத் தயாரா கின்றது என்றும் அந்தத் தக வல்கள் மேலும் கூறுகின்றன.**

**இது தொடர்பில் ஓரிரு மாதங் களுக்கு முன் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்கவும் ஐ.தே.கவின் தவிசாளருமான வஜிர அபேவர்த்தனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக் ஷவை அழைத்துப் பேசினர்.** ☞2



# மார்ச் 15 போராட்டத்தில் ஆசிரியர்களும் குதிப்பு



(பழுவூரான்)

நாடு முழுவதும் மார்ச் 15ஆம் நாள் நடக்கும் வேலை நிறுத்தப் போராட் டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கமும் பங்கெடுக்கும் என்று அதன்கிழக்குமாகாண இணைப்பாளரும் ம ாவட்டப் பொதுச்செய லாளருமான பொன் னுத்துரை உதய ரூபன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரி வித்தார்.

"அதிபர்கள் மற் றும் ஆசிரியர்கள் சம்பள முரண்பாட்டில் மூன்றிலொரு பங் கினை போராட்டங்கள் மூலம் நாம் வென்றெ டுத்தோம். மீதி மூன்றில் இரண்டு பங்கினை வென்றெடுப்பதற்கான எமது போராட்டம் தொடர்கின்றது. இது தொடர்பில் நாம் பல தடவைகள் கல்விய மைச்சுடன் பேச்சு நடத்திய போதும் அவையாவும் தோல் வியடைந்த நிலை யில் நாம் எதிர்வரும் புதன்கிழமை சகல தொழிற் சங்கங்களு டன் இணைந்து வேலை நிறுத்தப் போராட்டத்ததில் ஈடுபடவுள்ளோம்" - என்றார்.

# பதில் இன்னும் கிடைக்கவில்லை

தேர்தலுக்கான நிதி கோரி நிதி அமைச் சரான ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத் திற்கு எவ்விதமான பதி லும் கிடைக்கவில்லை என்று அரச அச்சகத் திணைக்களத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

சுமார் 7 இலட்சம் தபால் மூல வாக்குச் சீட்டுகளில் 75 வீத வாக்குச்சீட்டுகளே இது வரை அச்சிடப்பட்டுள் ளதாக அத்தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

இதுதொடர்பில் திணைக்களவட்டாரம் மேலும் தெரிவித்த தாவது:

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகளை அச் சிடுவதற்குத் தேவை யான பணத்தை உரிய முறையில் வழங்குமாறு கோரி நிதி அமைச்சுக்கு அனுப் பப்பட்டுள்ள கடிதத் திற்கு இதுவரை எவ்விதபதிலும் கிடைக் கவில்லை

நிதி உரிய நேரத் தில் கிடைக்காத பட்சத் தில் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு ☞2

# மீண்டும் பகிடிவதை கொடூரம் பல்கலை மாணவன் பாதிப்பு

## மூத்த மாணவர்களின் கொடுமையால் விபரீதம்

(ந.லோகதயாளன்)

பகிடிவதை காரணமாக மன அழுத்தத்துக்குள்ளாகி தன்னைத் தானே காயப்படுத்திக்கொண்ட மாணவன் தொடர்பான விசாரணைகளைப் பொலி- ஸார் தொடங்கியுள்ளனர்.

மொறட்டுவ பல் கலைக்கழகத்தின் தொழில் நுட்ப கல்வி நிறுவகத்தில் பயிலும் மாணவன் ஒருவரே தாங்கமுடியாத பகிடி வதை காரணமாக இப்படித் தன்னைத்தானே காயப்படுத்தி க்கொண்டு உயிரை ம ாய்க்க முற்பட்டிருக்கிறார் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

தவறான முடிவுக்குச் செல்லும் எண்ணங்கள் தனக்குள் இருந்தமையை ம ருத்துவசோதனையின்போது உறுதிப்படுத்தியிருக்கிறார். அவரது கழுத்திலும் கையிலும் வெட்டுக்காயங்கள் காணப்படுகின்றன. விரக்தி யில் அப்படிக் காயப்படுத்திக் கொண்டார் என்று தெரிவித்தி ருக்கிறார். ☞2

# ரணிலை விரட்டியடிக்கவேண்டும்

# இனியும் பிரிந்திருக்காமல் இணைந்து போராடுவோம்



வசந்த முதலிகே யாழ்ப்பாணத்தில் அழைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு தெற்கு என இனியும் நாங்கள் பிரிந்து இருக்காமல் இணைந்து செயற்பட வேண்டும் என யாழ்ப்பாணத்தில் அழைப்பு விடுத்தார் அனைத்துப் பல் கலைக்கழக மாண வர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப் படவேண்டுமென்றும் இந்த விடயங்களில் தாமும் இனி அதிக கவனம் செலுத்துவார் எனவும் அவர் உறுதி யளித்தார்.

வசந்த முதலிகே யாழ்ப்பாணம் வந்தி ருந்தார். அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதி நிதிகளும் அவருடன் கூடவே வந்திருந்தனர். அவர்களுக்கும் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு யாழ். நகரிலுள்ள தனியார் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இக் கலந்துரை யாடலில் ☞2

# சகலரும் ஒத்துழைத்தால் மட்டுமே தேர்தல் நடக்கும்

## ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

சகல தரப்பினரது ஒத்துழைப்பும் கிடைத் தால் மட்டுமே ஏப்ரல் 25 தேர்தலை நடத்த முடியுமெனத் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

இந்தத் தேர்தலால் சட்டவாக்கத் துறைக் கும் நீதித்துறைக்கும் இடையில் முரண்பாடு கள் தோற்றம் பெற லாம் என்ற எச்சரிக் கையையும் அவர் விடுத்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடை பெறுவதில் மீண்டும் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டிருக்கையில் களநிலமை குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடவடிக்கை களுக்கு நிதி விடுப்பு தொடர்பில் உயர் நீதி மன்றம் வழங்கிய இடைக் காலத் தடை உத்தரவுக்கு ☞2

# மக்கள் நம்பிக்கையைப் பாதுகாக்க சுதந்திரமான நீதித்துறை அவசியம்

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

நீதித்துறையின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை பாதுகாப்பதற்கு சுதந்திரம் மற்றும் பக்கச்சார்பற்ற நீதி த்துறை தேவையென்று சட்ட சம்மேளனத்தில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

கொரோனா காலப்பகுதி யில் பல்வேறு மாற்றங்களைச் சந்தித்தோம். இத்தகைய மாற்றங்கள் தடைகளைத் தாண்டி நாட்டை வழமை க்கு கொண்டுவருவதற்கு வழிவகுக்கும். சுதந்திரம் ம ற்றும் பக்கச்சார்பற்ற தன்மை மக்கள் நீதித்துறை மீது கொண்டுள்ள நம்பிக்கையை பாதுகாப்பதற்கு காரணமாக அமையும் என்றார். ☞2

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் இங்கே வந்து பார்த்தபோது இந்தத் தடவையும் ஆனல்ட் தான் மீண்டும் மாவட்டத் தலை வராகத் தெரிவு செய்யப் பட்டிருக்கிறார். இது அவருக்கு 7ஆவதோ 8ஆவதோ தடைவை. அதனால் 2 ஆண்டுகளுக்கு மேல் ஒருவர் தொடர்ந்து பதவியில் இருக்கஇயலாது என்று கொழும்பிலிருந்து வந்தவர்கள் சட்டம் பேசி இருக்கிறார்கள். இந்த வாக்கு வாதத்தில் இங்கிருந்த சிலர் திடீரென கொழும்பிலிருந்து வந்தவர்களுக்குக் கைவைத்துவிட்டார்கள் என்று தகவல்.

கடைசியில் இந்தப்பிச்சல் பிடுங்குப்பாடு பொலிஸ் நிலையம் வரை சென்றதாகவும் தகவல். முழுமையாக என்ன ஏது விடயம் என்று அறிந்த பின்னர் உங்களுக்கும் சொல்கின்றேன்.

*********

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும் சர்ச்சைகளுக்கும் அவ்வளவு கொண்டாட்டம். எங்க போனாலும் நிழல் போல அவருடன் சர்ச்சைளும் கூடவே போகின்றன. கடந்த சில நாட்களாகவும் அவர் தனர் பேஸ்புக் பக்கத்தில் ட்ரென்டிங். முஸ்லிம்களின் ஆடைத் தெரிவைக்கூடச் சகித்துக்கொள்ள முடியாத சுமந்திரன் தமிழ் - முஸ்லிம் உறவைப் பற்றிப் பேசுவதா என்றபரணியில்பலபதிவுகள். சட்டத்தரணிகள், முஸ்லிம் பிரமுகர்கள் பலரிடமிருந்து பதிவுகள், அவற்றை பலடசின் கணக்கானவர்கள் ரே் செய்திருக்கின்றனர் என்று பேஸ்புக்கில் பெரும் களேபரம்.

என்ன விடயம் என்று நோண்டிப் பார்த்தேன். அண்மையில் திருகோணமலையில் நடந்த ஒரு வழக்கில் சுமந்திரன் நீதிமன்றத்திற்குச் சென்றதுதான் சர்ச்சைகளின் மையப்புள்ளி. பாடசாலையில் முஸ்லிம் ஆசிரியர் ஒருவர் மத அடையாள ஆடையுடன் கடமைக்குச் சென்றபோது அவரைப் பதவியேற்கவிடவில்லை என்ற வழக்கு பிரச்சினை ஒன்று இருந்தது அல்லவா. அதில் சம்பந்தப்பட்டஅதிபருக்குஆதரவாக வழக்காட சுமந்திரன் சென்றதன்காரணமாகத்தான் இந்த சர்ச்சை.

திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு முஸ்லிம் கலாச்சார ஆடையான அபாயாவை அணிந்து கொண்டு கடமை ஏற்கச் சென்ற ஆசிரியை பஹ்மிதா றமீஸ் அவர்களை கடமை ஏற்க விடாமல் தடுத்து பாடசாலையை விட்டு விரட்டி விட்டி விட்டார்கள் என் கிற குற்றச்சாட்டுத் தொடர் பான சர்ச்சை பெரிதாக வெடித்து அது நீதிமன்றம் வரை சென்று பின்னர் முடித்துக் கொள்ளப்பட்டது. ஆசிரியர் அவரது கலாசார ஆடையோடு கடமையாற்றுவதில் எந்த விதப்பிரச்சினையும் இல்லை என்று அந்த விவகாரம் முடித்து வைக்கப்பட்டாலும் மழைவிட்டும் தூவானம் விடாத மாதிரி அதிபரும் ஆசிரியரும் மாறி மாறி ஒருவரை ஒருவர் தாக்கினர் என்று பதிவு செய்த முறைப்பாடுகள் மீதான வாழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன. அந்த வழக்கில்தான் சுமந்திரன் அன்று நீதிமன்றத்திற்குச் சென்றிருந்தார்.

அதாவது இது குற்றவியல் வழக்கு. கலாசார ஆடை தொடர்பான வழக்கு அல்ல.

வழக்குக்ககுப் போன சுமந்திரன், தன்னுடைய சமர்ப்பணத்தில் இவ்வழக்கு பொய்யாகப் புனையப்பட்ட ஒருவழக்கென்றும்அதிபரைத் தான் பஹ்மிதா றமீஸ் தாக்கினாரே அன்றி அதிபரால் பஹ்மிதாறமீஸுக்குஎந்தபங்கமும்விளைவிக்கப்பட்டவில்லை. இதேநேரம் இதே ஆசிரியருக்கு எதிராக பொலிஸார் தொடுத்த வழக்கு எதிர் வரும் ஆம் திகதி விசாரணைக்கு வருகின்றது என்றும் இவ் வழக்கினை வாபஸ் பெறாவிட்டால் கனதியான நட்ட ஈடுகளைச் செலுத்த வேண்டி நேரிடும் என்றும் குறிப்பிட்டார்.

இந்தக் கருத்துத்தான் சமூக வலைத்தளங்களைத் தீயாய் பற்றவைத்திருக்கிறது. அவர் எப்படி முஸ்லிம் ஆசிரியரை அப்படி மிரட்ட முடியும் என்ற கோபத்தில் கலாசார ஆடை தமிழ் - முஸ்லிம் உறவு எல்லாம் பிய்த்து உதறப்படுகின்றது.

நல்லவேளை தேர்தல் பரப்புரை எல்லாம் ஒய்ந்து போய்விட்டது. இல்லாவிட்டால் இதையும் தூக்கி வைத்துக்கொண்டு தமிழ் அரசியல்வாதிகள் சிலரும் அரைவேக்காடுகள் சிலரும் முஸ்லிம்களுக்காக நீலிக் கண்ணீர் வடித்திருப்பார்கள். நல்லவேளை அந்தக் கொடுமைகளை பார்க்க ரணில் எங்களையெல்லாம் விட்டு வைக்கவில்லை.

- இடிமின்னல் -

## நடக்கும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரெலோ மற்றும் புளொட் அமைப்புக்கள் சேர்ந்துதான் கூட்டமைப்பாக இருக்கிறது.

இந்தத் தேர்தலிலே குறித்த மூன்று கட்சிகளும் தனித்தனியாகபோட்டியிடுவது உகந்தது என்று தமிழரசுக் கட்சி ஒரு பரிந்துரையை முன்வைத்தது. அதை மற்றக் கட்சித் தலைவர்களுடனும் பேசிநாங்கள்முடிவெடுப்போம் என்றும்சொல்லியிருந்தோம்.

அந்தப் பேச்சில் புளொட் மற்றும் ரெலோ அதற்கு இணங்கவில்லை. எமது யோசனைக்கு அவர்கள் இணங்காதகாரணத்தினாலே அவர்கள் சொல்லுகின்றதைப் போலவே நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுத்தோம். ஆனால் அவர்களோ நீங்கள் தனித்து போட்டியிடுவதாக ஏற்கனவேஒருதீர்மானத்தை எடுத்துவிட்டீர்கள் என்றும் ஆனால் நாங்கள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ அல்லதுவேறுதரப்புக்களுடன் இணைந்தோ எப்படிப் போட்டியிடுவது என்பதை நாங்கள் தீர்மானிக்கிறோம் என்றும் சொல்லித்தான் அந்தக்கூட்டம் முடிவடைந்தது.

கூட்டம் முடிவடைவதற்கு முன்னதாகவே இரண்டு தரப்பினரிடமும் சம்பந்தன் ஐயா கேள்வியொன்றைக் கேட்டு பதிலையும் பெற்றிருந்தார். அதாவது இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரை எந்தத் தரப்பும் பாவிப்பதில்லை என்ற உறுதிப்பாட்டை அனைவரும் கொடுத்திருந்தோம்.

தேர்தலில் நாங்கள் போட்டியிடுகின்ற பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒருவரும்போட்டியிடவில்லை. கூட்டமைப்பில் இருக்கும் கட்சிகள் கூட்டமைப்பாக அல்லாமல் தனிதனிய போட்டியிடுவதால் அந்தப் பெயரை உபயோகிப்பதில்லை என்ற இணக்கப்பாட்டை நாங்கள் இப்போதும் பேனுகிறோம். ஆனால் ரெலோ மற்றும் புளொட் ஆகிய இரு தரப்பினரும் பேனுவதாகத் தெரியவில்லை.

இப்போது வேறு தரப்புக் களுடன் இணைந்து ஜனநாயக தேசியக் கூட்டணி என்ற கட்சியில்தான் அவர்கள் போட்டியிடுகின்றனர். அந்தப் பெயரையுமே அவர்கள் தவறாகத் திரித்துத்தான் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்கிறார்கள். தேர்தல் திணைக்களத்தில் உள்ள பதிவிலே தமிழ் ஜனநாயகத் தேசியக்கூட்டணிஎன்றுதான் இருக்கிறது.

அந்தக் கட்சி ஆரம்பத்திலே ஒரு கூட்டமைப்பாகத் தான் பதிவு செய்யப்பட்டது. அதில் பத்மநாபா ஈபிஆர்எல்எப் மற்றும் டிபிஎல்எப் என்று சித்தார்த்தன் அவர்களிடம் இருந்த கட்சியுமாக இரண்டு பதிவு செய்யப்பட்ட கட்சிகள் இருந்தன. இந்த இரண்டும் சேர்ந்துதான் கூட்டமைப்பாக பதிவு செய்யப்பட்டு பின்னர் அரசியல் கட்சியாகவும் மாறியிருக்கிறது.

அதிலே தான் இப்போது அவர்கள் போட்டியிடுகிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக அவர்கள் போட்டியிடவில்லை. நாங்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகபோட்டியிடவில்லை - என்றார்.

## விமான நிலைய ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி மஹிந்தானந்த அளுத்கமகே தனது வெளிநாட்டுப் பயணத்தை இரத்துச் செய்துள்ளார்.

எனினும், தமக்கு எதிராக மத்துகம நீதிமன்றத்தால் அவ்வாறான எந்தவொருவழக்கோ அல்லது வெளிநாட்டுப் பயணத் தடையோ விதிக்கப் படவில்லை என்று மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளர் தெரிவிக்கையில், தரவு அமைப்பில் ஏற்பட்ட தவறு காரணமாகவே இவ்வாறான நிலை ஏற்பட்டிருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், உண்மையில் இதுதொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமை விசாரணை நடத்தப்படும் எனக் குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய குடிவரவு-குடியகல்வுதிணைக்கள அதிகாரிகள் இருவரை விசாரணைகள் முடியும் வரை பணி இடைநிறுத்தம் செய்யக்குடிவரவு-குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமவுக்குவெளிநாடுசெல்வதற்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் முன்னர் தடை விதித்திருந்த நிலையில், நீதிமன்றத்தில் உண்மை நிலைமைகளை முன்வைத்ததன் பின்னர் குறித்த தடையை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சித் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

இந்தச் சம்மேளனத்தின் தலைமைஅதிதியாகபிரதமநீதியரசர்ஜயந்தஜயசூரியகலந்து கொண்டார் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட முக்கியஸ்தர்களும் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உரையாற்றினார். அவர் தெரிவித்ததாவது:

நீங்கள் அனைவரும் சட்டத்தினைப் பாதுகாக்கும் பாதுகாவலர்கள். எமது நாடுகளுக்கு இடையிலான தொடர்புகளின் தொடக்ககம் முதலேஜயநாயகக்கொள்கைகள் மீதான சுயாதீன நீதித் துறையைப் பிரதிபலித்தது. அமெரிக்கா இலங்கை மக்களின் உரிமைகளுக்காக முன்னிற்கின்றது.

நாட்டின் மகத்தான வரலாற்றில் சுதந்திரமான தேர்தல்கள்முக்கியமானவை. தேர்தல்கள் மூலமாகச் சட்ட ரீதியான நேரடியான பிரதிநித்துவத்தை உறுதி செய்வதற்கான உரிமை மக்களுக்கு கிடைக்கும். இதன் காரணமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கானதேர்தலை நடத்துவது முக்கியமானதாகும் - என்றார்.

## ஆணைக்குழு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குத்தேவையானநடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும் முகமாக மீண்டும் ஆணைக்குழுவில் அங்கத்துவம் பெற நினைக்கிறேன். அதனால்விண்ணபம் செய்துள்ளேன்.

அத்துடன், தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்புரிமைக்கு மீண்டும் விண்ணப்பிக்குமாறு பல சிவில் அமைப்புகளும்என்னைவலியுறுத்திக் கேட்டுக்கொண்டன. அவற்றின் நியாயமான தன்மை குறித்து ஆராய்ந்து விண்ணப்பம் செய்யும் முடிவினை எடுத்தேன் என்றார்.

முன்னதாக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்புரிமைக்கு மீண்டும் விண்ணப்பித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரும் தற்போதைய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவருமான மஹிந்த தேசப்பிரிய தெரிவித்திருந்தார். அத்துடன், இவர் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அங்கத்துவத்திற்காகவும் இரண்டாவது தடவையாகவும் விண்ணப்பித்துள்ளார்.

## அடுத்த ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரணில் விக்கிரமசிங்கவைப் பொது வேட்பாளராக நிறுத்துவதற்கு அவர்கள் இருவரும்மொட்டுக்கட்சியின் ஆதரவைப் பஸிலிடம் கோரி இருந்தனர்.

மொட்டு - ஐ.தே.க. வாக்குகளையும், வடக்கு - கிழக்கில் உள்ளதமிழ்-முஸ்லிம்வாக்குகளையும் - மலையக மக்களின்வாக்குகளையும்வைத்து வெற்றிபெறலாம் என்று வஜிர அப்போது பஸிலிடம் கூறி இருந்தார்.

அந்தவேளை ரணிலைப் பொது வேட்பாளராக நிறுத்துவதற்குப் பஸிலும் பச்சைக் கொடி காட்டியிருந்தார் என்று தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

## பதில் இன்னும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர், வாக்குச்சீட்டுகளை தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்க முடியாது.

உரிய நேரத்தில் நிதி கிடைத்தால் 30 நாட்களுக்குள் வாக்குச்சீட்டுகள் முழுவதையும் அச்சடித்து வழங்க முடியும்.

இதேவேளை, வாக்குச் சீட்டு அச்சிடும் சரியான திகதியை 3 நாட்களுக்கு முன்னர் தெரிவிக்கும் பட்சத்திலேயே, பாதுகாப்பினை வழங்க முடியும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உள்ளூராட்சி மன் றத் தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிடுதல் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் 533 மில்லியன் ரூபாதேவைப்படும்நிலையில், 40 மில்லியன் ரூபாவே இதுவரைவழங்கப்பட்டுள்ளது என்றும் அத்தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

## மீண்டும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனதுகல்விநிறுவகத்தின்மூத்த மாணவர்கள், இரவில் நீண்ட நேரம் தம்முடன் தொலைபேசியில்உரையாடவேண்டும் என்று வற்புறுத்தியுள்ளனர். மிகவும் வறிய பின்னணியில் இருந்துவந்தமாணவனுக்கு இது பெரும் சுமையாக மாறி யுள்ளது. குறைந்தது 4 மணிநேரம் அவ்வாறு தொலைபேசி வேண்டும் என்றும் மூத்த மாணவர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

இதற்கு மேலாக விடுமுறையில் யாழ்ப்பாணம் வந்திருந்தமூத்தமாணவர்கள் இருவரால் இந்த மாணவன் தாக்கப்பட்டும் உள்ளார். இவற்றால் கடும் விரக்தியடைந்த மாணவன் தான் இனிப் படிக்கப்போவதில்லை என்று வீட்டில் சொல்லியிருக்கிறார். அதற்கான காரணம் புரியாத பெற்றோர்படிப்பைக்கைவிடக் கூடாது என்று கண்டித்து பல்லைக்கழகம்செல்லமாணவனை நிர்ப்பந்தித்துள்ளனர்.

இதையடுத்து விரக்தியில் வீட்டைவிட்டு வெளியேறி உள்ளார் மாணவன். 4 நாட்களாக அவர் வீடு திரும்பவில்லை. இதனால் குடும்பத்தினர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். பொலிஸார் இளைஞனைத்தேடிவந்தநிலையில், அவரை ஒத்த ஒருவர் தெல்லிப்பழையில் பாழடைந்த வீட்டில் இருப்பதாகத் தகவல் கிடைத்து அங்கு சென்று மாணவனை அழைத்து வந்தனர். மருத்துவப் பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

சம்பவம் தொடர்பில் மொறட்டுவப்பல்கலைக்கழக நிர்வாகத்திற்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

பேராதனைப்பல்கலைக் கழக பொறியியல்பீட மாணவனான செல்வநாயகம் வரப்பிரகாஸ் 1997ஆம் ஆண்டு மூத்த தமிழ் மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டபகிடிவதை காரணமாக உயிரிழந்தார். பகிடிவதையின் போது வழங்கப்பட்ட கடுமையான உடற்பயிற்சிகாரணமாக அவரது சீறுநீரகம் செயலிழந்து போனதை அடுத்து அவர் உயிரிழந்திருந்தார்.

அவரது இறப்பு ஏற்படுத்திய பேரதிர்ச்சியுடன் பகிடிவதையைத் தடைசெய்யும் சட்டம் கொண்டுவரப்பட்டது. எனினும் தொடர்ந்தும் இது போன்ற சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன.

## மக்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவேளை, இலங்கைச்சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் உரையாற்றுகையில், நீதிமன்ற சுயாதீனத் தன்மை என்பது இலங்கை வரலாற்றின் ஒரு முக்கியமானவிடயமாகும்.நாட்டுக்கும், மக்களுக்கும் சுயாதீன நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு சுயாதீன நீதித்துறை அவசியமாகும். நெருக்கடிகளுக்கு மத்தியில் நீதியின் குரல் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினை இந்தியாவின் த ஹிந்து நாளிதழ் விழித்திருந்தது. மக்களின் கருத்துச் சுதந்திரம் மீறப்பட்ட அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் அதனைப் பாதுகாப்பதற்கு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தலையீடுகளைச்செய்திருந்தது என்றார்.

## இனியும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவில் பேசிய வசந்த முதலிகே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

மக்கள் மீது பல்வேறு அடக்குமுறைகளையும் ஆக்கிரமிப்புக்களையும் மக்கள் விரோத செயற்பாடுகளையும் ஆட்சியாளர்கள் திணிக்கின்றனர். இதனால் நாளாந்தம் பெரும் நெருக்கடிகளை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த ஆட்சியாளர்களின் மக்கள் விரோத செயற்பாடுகளுக்கு எதிராகவே நாம் போராடி வருகினறோம். ஆனால் எமது ஜனநாயகப் போராட்டத்தை அடக்கி ஒடுக்குவதற்கு பல்வேறு முயற்சிகளை ஆட்சியாளர்கள் மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக கடந்த சில தினங்களிற்கு முன்னர்கூட மாணவர்கள் மேற்கொண்ட போராட்டத்தின் போது ஊடுருவியசிலர்மாணவர்கள்மீது தாக்குதல்நடத்தியிருந்தனர். இத்தாக்குதல்நடத்தியவர்கள் யார் என்று நாம் கேட்டாள் பொலிஸாரும் இராணுவத்தினரும் பொய் கூறுகின்றனர்.

கடந்த காலத்தில் நாட்டு மக்கள் அரசியல் பொருளாதார ரீதியாக மிகவும் பதிக்கப்பட்ட நிலையில் இருந்தார்கள். அதற்கு ஏதிரான ஜனநாயக ரீதியான போராட்டத்தை அப்போது எவ்வாறு மழுங்கடித்தார்கள் என்பது அனைவருக்கும் தெரியும்.

குறிப்பாகப் பொல்லுதடியுடன் பாதுகாப்பு தரப்பு நடந்த விதம், பயங்கரவாதத் தடை சட்டம் ஊடான கைது நடவடிக்கை, என பல நடவடிக்கைகளை குறிப்பிடலாம். இவை எல்லாம் ஆட்சியாளர்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்வற்காகவே தான் என்பதும் தெரிந்த விடயம்.

இன்றைய இந்தச் சந்திப்பில்கூட பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றப்பட வேண்டும், சிவில்நிர்வாகத்தில்இராணுவ தலையிடு உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடினோம்

அதேநேரம்அரசியல்தீர்வு தொடர்பாகவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் கோரினார்கள். தமது இந்தப் பிரச்சினைகளைத் தெற்கிற்கு கொண்டு செல்லுங்கள், தெற்கின் போராட்டத்தில் பேசுங்கள் என்று எல்லாம் இங்குள்ள மாணவர்கள் கோரியிருந்தனர்.

ஆகையினால் இனியும் நாங்கள் பிரிந்து நடக்காமல் இந்த விடயங்களில் எல்லாம் இணைந்து செயற்பட வேண்டும். எனவே வடக்கில் உள்ள அனைத்து பிரச்சினைகள் மீதும் எமது அவதானம் இருக்கும். அத்தோடு இனியும் எங்களுக்குள் பிரிவினை இல்லாமல் வடக்கும் தெற்கும் என இணைந்து போராடுவோம்.

நாம் மேற்கொண்டு வருகின்ற இந்தப் போராட்டம் மகிந்த குடும்பத்திற்கு எதிராகத்தான் தொடங்கியது. அந்தப்போராட்டத்தின் ஊடாக ஜனாதிபதியான கோட்டவை கலைத்த பின்னர் ஜனாதிபதியாக ரணில் வந்துள்ளார்.

கோட்டா உள்ளிட்ட ராஜபக்ஷ தரப்பை பாதுகாக்கும் வகையிலையே ரணில் விக்கிரமசிங்க செயற்படுகிறார். இதற்காக அடக்குமுறைகளை பிரயோகித்து மக்கள் விரோத செயற்பாடுகளையே அவரும் முன்னெடுத்துவருகின்றநிலையில் இவர்களை எல்லாம் விரட்டியக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## நடக்கும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைய,

திறைசேரி மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் செயற்பட வேண்டும்.

2023ஆம்ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தல்நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை திறைசேரி விடுவிப்பதை இடைநிறுத்தியுள்ளமைக்கு எதிராக உயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலத்தடை உத்தரவை அடிப்படையாக கொண்டு கடந்த 7ஆம் திகதி அரச அச்சக திணைக்கள தலைவர், பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட தரப்பினருடன் பேச்சுநடத்தினோம். அழைப்பு விடுத்தும் திறைசேரியின் செயலாளர் கலந்துகொள்ள வில்லை.

உயர் நீதிமன்றத் தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு அனைவரும் செயற்படவேண்டும் என்று அறிவுறுத்தியதைத்தொடர்ந்து அரச அச்சக திணைக்கள தலைவர் கங்கானிலியனகே உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தபால்மூலவாக்கெடுப்புக்கான வாக்குச்சீட்டுக்களை 5 நாட்களுக்குள்ளும்,பொதுவாக்கெடுப்புக்கான வாக்குச்சீட்டை 20நாட்களுக்குள்ளும்வழங்க முடியும் என்று தெரிவித்தார்.

அத்துடன், நிதி விடுவிப்பு தொடர்பில் உயர் நீதிமன்றம் இடைக்காலத்தடையுத்தரவை பிறப்பித்துள்ளதால் அரச அச்சக திணைக்களம் திறைசேரியிடமிருந்து நேரடியாக நிதிபெற்றுக்கொள்ள வேண்டுமெனக் குறிப்பிட்டோம்.

(05ஆம் பக்கம் பார்க்க)






காலைக்கதிர் Kalaikkathir

# தமிழர்கள் மீதான அடக்குறை தந்திரங்களே சிங்களவர்கள் மீது இன்று ஏவப்படுகின்றன

## இப்படிச் சொல்கிறார் சுமந்திரன் எம்பி



(எஸ்.நிதர்ஷன்)

கடந்த காலங்களிலே தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட அடக்கு முறைத் தந்திரங்களே இப்போது சிங்கள மக்களுக்கு எதிராகவும் பயன்படுத்தப்படுகன்றன என்று தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்து அவர் இதனைத் தெரிவித்தார். இவ்விடயம் குறித்து மேலும் தெரிவித்ததாவது..

ஜனநாயக ரீதியிலான போராட்டங்கள் பலவற்றை என்னவிதமாக இந்த ஆட்சி அடங்குகிறது என்பது குறித்த தெளிவான படமொன்று இப்பொழுது மக்களுக்கு தெரிய வந்து கொண்டிருக்கிறது.

குறிப்பாகப் படையினர் நீண்ட பொல்லு தடிகளை முதுகின் பின்னால் மறைத்து வைத்து அதனாலேயே பல்கலைக்கழக மாணவர்களை தாக்கிய சம்பவம் சில தினங்களிற்கு முன்னர் நடைபெற்றிருக்கிறது. ஆனால் இத் தாக்குதலை தாங்கள் நடத்தவில்லை என்றும் அதனை வேறு யாரோ நடாத்தியதாகவும் படையினர் ஒரு சாட்டுச் சொல்லியிருக்கின்றனர்.

எங்களுக்கு இது புதிதான விடயமல்ல. ஏனெனில் 2011 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றை கூட்டமைப்பு நடத்தியபோது, அதிலும் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கே இருந்த போதும்கூட இதே வண்ணமாக அதாவது இராணுவ சீருடையோடு நீண்ட பொல்லு தடிகளோடு வந்து மக்களை தாக்கினார்கள். எங்களையும் தாக்க முற்பட்டார்கள்.

இராணுவம்தான் தாக்கியது என்று கூறிய போது இராணுவம் இல்லை என்றே இதேபோன்று பதில் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் போர் முடிவடைந்து இரண்டு வருடங்களிற்குள்ளே வேறொரு அணி இராணுவச் சீருடையோடு இப்படியாக செயற்படுகிறதா என்று கேட்ட போதுதான் இல்லை இல்லை அது நாங்கள் தான் என்று கூறி எங்களிடத்தே பகிரங்கமாக மன்னிப்பும் கேட்டார்கள்.

ஆகவே இது அவர்களுடைய ஒரு பழக்கம்தான். தொடர்ச்சியாக இப்படியான செயற்பாடுகளிலே ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு தமிழ் மக்களுக்கு எதிராகக் கையாண்ட பலவிதமான அடக்குமுறைத் தந்திரங்கள் இப்போது சிங்கள மக்களுக்கு எதிராகவும் திருப்பப்படுகிறது. அது மட்டுமில்லாமல் இடையிடையே முஸ்லிம் மக்களுக்கு எதிராகவும் செய்யப்பட்டது.

ஆகையால் தான் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றாக ஒற்றுமையாக இதற்கு எதிராகக் குரல் கொடுக்கவேண்டும். இது எங்களுக்கு எதிரானது அல்ல அவர்களுக்கு எதிரானது தானே, எங்களுக்கு எதிராக இது நடந்த போது அவர்கள் பேசாமல் இருந்தவர்கள் தானே, ஆகையினால் நாங்கள் ஏன் இப்போது அவர்களுக்காக பேச வேண்டும் என நினைப்பது எல்லாம் தவறு.

ஒட்டுமொத்தமாக ஒன்றாகச் சேர்ந்து மக்கள் குரல் கொடுக்கவேண்டும். விசேடமாக தமிழ் மக்கள் குரல் கொடுக்க வேண்டும். ஏனெனில் இதனால் பாதிக்கப்பட்டது கூடுதலாகத் தமிழ் மக்கள்தான்.

மற்றவர்களோடு சேர்ந்து நாங்கள் கேள்வி எழுப்பாது விட்டால் அடுத்த தடவையும் இதனால் பாதிக்கப்படுவது தமிழ் மக்களாகத்தான் இருப்பர். எனவே இந்த விசயத்தில் நாங்கள் மிகக் கவனமாக சரியான திசையிலே எங்களுடைய எதிர்ப்புக்களை தெரிவிக்க வேண்டும்.

அடுத்ததாக தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட பலவிதமான அத்துமீறல்கள் மனித உரிமை மீறல்கள் மனிதாபிமான சட்டங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் காரணமாகத்தான் படைத்தளபதியாக இருந்த சவேந்திர சில்வா உட்பட வேறு பல படை அதிகாரிகளுக்கு எதிராக சர்வதேசம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. பயணத் தடை எல்லாம் விதிக்கப்பட்டிருக்கிறது.

அதே விதமான அடக்குமுறைகளையே இலங்கை ஆட்சியாளர்கள் இப்போது தொடங்கியிருகக்கிறார்கள். இப்படியான அடக்குமுறைகள் தொடருமாக இருந்தால் தற்போதைய இராணுவத் தளபதிக்கும் மற்றைய இராணுவ அதிகாரிகளுக்கும் இராணுவத்தினருக்கும் அதேவிதமான சூழ்நிலைதான் ஏற்படும் என்பதையும் அவர்களுக்கு நான் தெரியப்படுத்த விரும்புகிறேன் - என்றார்.




## பேராதனையில் புதையல் தோண்டிய இரண்டு பௌத்த துறவிகள் கைது!

பேராதனை கன்னொறுவா பிரதேசத்தில் புதையல் தோண்டும் பணியில் ஈடுபட்டனர் எனச் சந்தேகத்தின் பேரில் இரண்டு மதகுருக்கள் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களிடமிருந்த மண் அகழும் உபகரணத் தொகுதிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைதான இருவரும் கன்னொறுவா பிரதேசத்தை சேர்ந்த விகாரை ஒன்றை சேர்ந்த 30 மற்றும் 58 வயதுடைய இரண்டு பௌத்த துறவிகளாவர்.

குறித்த இரு சந்தேக நபர்களை கண்டி நீதிவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதோடு, பேராதனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எழுதுமட்டுவாளில் டீசல் விநியோகம்

தென்மராட்சி, மார்ச் 13

எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பிற்கு உட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான இலவச டீசல் விநியோகம் இன்று இடம் பெறவிருப்பதாக கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்தார்.

டீசலுக்கான பதிவுகள் திங்கட்கிழமை காலை சாவகச்சேரி கமநலசேவை நிலையத்தில் இடம்பெறும். 2023ஆம் ஆண்டிற்கான நில வரியினைச் செலுத்தி எரிபொருளுக்கான டோக்கனைப் பெற்று தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசலைப்பெற்றுக்கொள்ள முடியும்.

4 பரப்பிற்கு ஒரு லீட்டர் என்ற அடிப்படையில் 12 பரப்பிற்கும் 60 பரப்பிற்கும் இடைப்பட்ட வயல் நிலத்தில் சிறுதானியச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்கப்படும் என மேலும் அவர் தெரிவித்தார்.

## விமான ரிக்கெற் விலை குறைந்தது!

டொலருக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு காரணமாக இலங்கையில் கொள்வனவு செய்யப்படும் விமான டிக்கெற்களின் விலையும் சுமார் 5 சத வீதமாகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

கடந்த வார இறுதியில் டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு கணிசமாக குறைந்தமை குறிப்பிடத்தக்கது.

## மோ. சைக்கிள்கள் திருட்டு அதிகரிப்பு

கடந்த 24 மணிநேரத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாணம், சுன்னாகம், அச்சுவேலி, கோப்பாய் பொலிஸ் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் நான்குக்கும் அதிக மோட்டார் சைக்கிள் திருட்டுகள் மிக நூதனமாக இடம் பெற்றுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்களோடு தொடர்புடையவர்களைக் கண்டுபிடிப்பதற்கான விசாரணைகளை பொலிஸார் வேகமாக முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன் சிசிடிவி கமரா உதவியுடன் மோட்டார் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட மர்ம நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எதிர்க் கட்சிகளின் வீண் முயற்சி

அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் மக்களாட்சிக்கு விரோதமான அரசியல் செயற்பாடுகள் காரணமாக அவருக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து அவரைப் பதவி நீக்கம் செய்வோம் என்று அண்மையில் நாடாளுமன்றத்தில் பேசிய சமசமாஜக் கட்சித் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்திருந்தார்.

அதற்கானமுன்னோட்டம்போன்றுஇப்போதுதலைமை அமைச்சர் (பிரதமர்) தினேஸ் குணவர்த்தனவுக்கு எதிராகக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவது பற்றி எதிர்க் கட்சிகள் ஆலோசிக்கின்றன என்று செய்திகள் வந்திருக்கின்றன. தேர்தலை ஒத்தி வைக்கும் யோசனையை அவர்தான் தெரிவித்தார் என்கிற குற்றச்சாட்டின் அடிப்படையில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றலாமா என்பதைச் சோதித்துப் பார்க்க விரும்புகின்றன எதிர்க் கட்சிகள்.

நிறைவேற்று அதிகார அரச தலைவரை நாடாளுமன்றம்நம்பிக்கையில்லாத்தீர்மானத்தின் மூலம்பதவி விலக்கலாம் என்கிற சட்ட ஏற்பாடுகள் இருந்தாலும் இதுவரையில் இலங்கையில் அவ்வாறு நடந்ததில்லை. அதுவும் இப்போது அப்படி ஒன்று நடப்பதற்கான வாய்ப்புக்கள் எதுவும் இல்லை.

நாடாளுமன்றத்தில் பொது ஜன பெரமுனவுக்கு முன்பிருந்த உறுப்பினர்களின் ஆதரவு இல்லை என்றாலும் தற்போதும் அவர்கள்தான் பெரும்பான்மையினராக இருக்கின்றனர். அதனால் அரச தலைவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வாக்குகளுடன் நிறைவேற்றுவது நடக்கக்கூடிய காரியமல்ல.

ரணிலைப் பதவியில் இருந்து அகற்றினால் தமது நிலை அந்தோ பரிதாபமாகிவிடும் என்பது ஆளும் தரப்பு நாடாளுமன்றத்திலுள்ள பொது ஜன பெரமுன கட்சியினருக்கு நன்கு தெரியும். தங்களைப் பாதுகாத்து அரவணைக்கும் ஒரு எதிரணி அரச தலைவர் இருக்கும்போது அவரை இழக்க யார்தான் விரும்புவார்கள். அதனால் அந்த மாதிரியான கதைகள் எல்லாம் நடக்கக்கூடியனவல்ல.

அதற்காகத்தனர் தலைமை அமைச்சர் டினேஸ் குணவர்த்தனவில் அதனைச் செயற்படுத்திப் பார்க்கலாம் என்கிற யோசனைக்கு எதிர்க் கட்சிகள் வந்திருக்கின்றன. டினேஸைச் சில சமயம் பலக்கடாவாக்க ஆளும் தரப்பினரும் ஒத்துழைக்கக்கூடும் என்பது எதிர்க் கட்சிகளின் ஆசை. ஏனெனில் டினேஸை அந்தப் பதவியில் இருந்து அகற்றுவதன் மூலம் ஆளும் தரப்புக்கு இழப்பு ஏதும் வந்துவிடப்போவதில்லை. அதனால் அவரைக் கைவிடுவதற்கு அவர்கள் முன்வரலாம் என்கிற எதிர்பார்ப்பு இருக்கிறது.

ஒருவேளை அப்படி நடந்துவிட்டால் அதனையே ஒரு வாய்ப்பாக, அழுத்தமாகப் பயன்படுத்திக்கொண்டு அரச தலைவருக்கு எதிராகவும் அத்தகைய ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் நப்பாசைப்படும். எனினும் அவையெல்லாம் நடக்கக் கூடிய காரியங்களல்ல.

அடுத்த அரச தலைவர் தேர்தல் நடக்கும் வரையில் ரணிலையோ அல்லது ஆட்சியிலுள்ள வேறு யாரையுமோ இதுபோன்ற நம்பிக்கையில்லாத் தீர்மானங்களால் அசைக்க முடியாது என்பதுதான் யதார்த்தம்.

# ஜே.ஆரின் கொள்கையை பின்பற்றிவருகிறார் ரணில்

## போராடும் மக்களுக்கு கம்மன்பில எச்சரிக்கை



முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் கொள்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பின்பற்றுகின்றார். ஆகவே, ஜனநாயகத்துக்காகப் போராடும் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் உதயகம்மன்பில எச்சரிக்கை விடுத்தார்.

நாவல பகுதியில் ஞாயிற்றுக்கிழமை நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போது அவரர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழுஅரசமைப்புக்கு அமைய தீர்மானங்களை முன்னெடுத்தாலும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தேர்தலுக்கு இணக்கம் தெரிவித்தால் மாத்திரம்தான் தேர்தல் இடம்பெறும் என பொதுஜன பெரமுனவின் உள்ளகக்கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தலை நடத்த இடமளிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி ரணில் பொதுஜன பெரமுனவுக்கு வாக்குறுதி வழங்கிய காரணத்தினால் தான்பொதுஜனபெரமுனவின் நாடாளுமன்றஉறுப்பினர்கள் சுதந்திரமாக கிரிக்கெட் விளையாடுகிறார்கள்.


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சியில் இருக்கும்போது ஜனநாயகம் பற்றி முழு உலகத்துக்கும் பாடம் கற்பித்தார். ஆனால், அதிகாரத்துக்கு வந்ததன் பின்னர் சர்வாதிகாரம் குறித்து உலகுக்கு பாடம் கற்பிக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன ஜனநாயகத்துக்கு எதிராக செயற்படும்போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்த மக்கள் மீது வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டார். தற்போது அவருடைய கொள்கையை பின்பற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறித்து ஜனநாயக உரிமைக்காக போராடும் மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனநாயகத்துக்கு எதிராக செயற்படும்போதுபோர்க்கொடி தூக்கிய கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுக்கப்படும் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளை கண்டும் காணாதது போல் இருக்கின்றன - என்றார்.

# மக்களுக்கு நெருக்கடி தொடரும்போது ஜனநாயகத் தீர்வை தேடுவது கடினம்

## மத்திய வங்கி ஆளுநர் கருத்து



பொதுமக்கள் நெருக்கடிகளுக்குள் இருக்கின்ற நிலையில் அதனை முழுமையாக முடிக்காது,ஜனநாயகவழியில் தீர்வைத் தோடுவது கடினமானவிடயம்என்றுஇலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

இலங்கைச் சட்டத் தரணிகளின் ஏற்கபாட்டில் தேசிய சட்ட சம்மேளனம் கொழும்பில் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது அவர் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். வங்கிவட்டிவீதங்கள் குறைவடைகின்றன. பண வீக்கம் குறைவடைகின்றது. ஆகவே நாம் எவ்விதமான பாதையில் பயணிக்கின்றோம் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது.

வரி விதிப்புக்கு எதிராகக் குரல்கொடுப்பவர்கள் பற்றிக் கவனம் செலுத்தவேண்டும். வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வங்கி ஊழியர்கள், ஏனைய அரச தொழில் புரிவோருக்கு பெரும் தாக்கம் உள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். அது மட்டுமன்றி மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் தொடர்பாகவும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

தற்போது வரி அதிகரிப்புக்கு எதிராக போராட்டம் நடத்துபவர்கள்தமதுவருமான அதிகரிப்புக்கு ஏற்ப வரியைச் செலுத்தவேண்டும்என்பதால் போராட்டம்செய்கின்றார்கள்.

அதுமட்டுமன்றி வரிகள் விதிக்கப்படுகின்றபோதும், சம்பளங்கள்உயர்ந்திருந்தால் பிரச்சினையில்லை. ஆனால் ஊழியர்களின் சம்பளங்கள் அவ்வாறே இருக்கையில் முன்பைவிடவும் அதிகளவான வரிகள் தற்போது விதிக்கப்பட்டுள்ளன.

இதனால்தான் சம்பளத்தைக் கூட்டுமாறு அல்லது வரியைநீக்குமாறுபோராட்டம் செய்கின்றார்கள். ஆனால் தனியார்துறைஊழியர்களோ அல்லது சட்டத்தரணிகளோ ஒன்றிணைந்து எதிர்ப்பில் ஈடு படுவதைக் நாம் காணவில்லை. அரசாங்கத்தினைப் பொறுத்தவரையில்அரசஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு வழங்கும் அளிவிற்கு நிலைமைகள் காணப்படவில்லை.

அதேநேரம்,வரிஎவ்வாறு செயற்படுத்தப்படுகின்றது என்பது தொடர்பில் வெளிப்படைத்தன்மையுடன் இருக்க வேண்டும். அதனை அறிந்து ஆர்ப்பாட்டத்தில்ஈடபடுபவர்கள் அதனைக்கைவிடவேண்டும்.

சட்டத்தினை மதிக்கும் சட்டத்தரணிகளாகஇருந்தாலும் சரி, சட்டத்தினை மதிக்காத சட்டத்தரணிகளாகஇருந்தாலும் சரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடமாட்டார்கள். அதனாலேயே அனைவரும் பக்கச்சார்பற்ற முறைமயின் கீழ் வரியைச் செலுத்தவேண்டும் - என்றார்.

## மக்களிடம் அதிகாரம் மாறும்

# பெரும் அரசியல் புரட்சி இம்முறை வெடிக்கும்

## ஜேவிபி தலைவர் தெரிவிப்பு



அதிகாரவர்க்கத்திடமிருந்து மக்களிடத்தில் ஆட்சி அதிகாரம் மாறும் பெரும் அரசியல் புரட்சி இம்முறை நடைபெறுவதற்கான வாய்ப்பு தோன்றியிருப்பதால் ஏற்பட்டுள்ள அச்சத்தினாலேயே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கு ஆளும்தரப்பினருக்கு அச்சம் ஏற்பட்டுள்ள என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கம்பஹாவில்நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலுத் தெரிவித்ததாவது:

தேர்தல்கள்ஆணைக்குழு தேர்தல்நடத்துவதற்காக மார்ச் 17ஆம் திகதிக்கு முன் தமக்கு ஆயிரத்து 500 மில்லியன் ரூபாக்களை ஒதுக்கீடு செய்யுமாறு கோரியுள்ளது. ஆனால் நிதி அமைச்சராக இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த நிதியை ஒதுக்க முடியாது என்று கூறுகிறார். அவர் தனது ஆட்சியிடம் நிதி இல்லை என்றே பதிலளிக்கிறார்.

அண்மையில் 1800 மில்லியன் ரூபா குறைநிரப்பு பிரே ரணை ஒன்று நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறித்த குறைநிரப்பு பிரேரணையானது ஜனாதிபதி செயலக செலவீனங்களுக்காக நிதியை விடுவிப்பதற்கானதாகும்.

எனவே, நிதி இல்லாது தேர்தல்நடத்தப்படாமலில்லை. நிதி இல்லாது தேர்தலை பிற்போடும் கலாசாரம் எமது நாட்டில் உருவாகுமானால் அது வரலாற்றுத் தவறாகும். ஜனநாயகத்தை முழுமையாக முடக்கி விடும்.

உண்மையிலேயே இல்லாது போயுள்ளது நிதி அல்ல. தேர்தலே ஆகும். எமது நாட்டில் இதுகால வரையிலும் நடைபெற்றதேர்தல்களில் அதிகாரவர்த்தகத்தினே ஆட்சியில் மாறிமாறி இருந்தனர். ஆனால் இம்முறை என்ன நடக்கப்போகின்றது என்ற கேள்வி உள்ளது. இம்முறை மிகப்பெரும் அரசியல் புரட்சி நடைபெறவுள்ளது. அதிகார வர்க்கத்திடமுள்ள அதிகாரங்கள் பொதுமக்களிடத்தில் மாறுவதற்கான அறிகுறிகள்தோன்றியுள்ளன. அதனாலேயே தேர்தலை நடத்துவதற்கு அச்சமடைகின்றனர் - என்றார்.

# ஏப்ரல் 25 தேர்தல் நிச்சயம் இல்லை

## அரசியல் வட்டாரம் தெரிவிப்பு




உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்குப் பொருத்தமானதிகதிஏப்ரல்25 என்றுதேர்தல்கள்ஆணைக்குழு அறிவித்துள்ள போதிலும்அதற்குநிதிவழங்குவது தொடர்பில் நிதி அமைச்சு இன்னும் பச்சைக் கொடி கட்டாததால் தேர்தல் மேலும் ஒத்திவைக்கப்படலாம்என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தேர்தலை நடத்துவதற்கான நிதியைத் தேர்தல்கள் ஆணைக்குழு பல தடவைகள் நிதி அமைச்சிடம் கேட்டுவிட்டது. எந்தப் பதிலும் இல்லை.

நிதி அமைச்சர் என்ற வகையில், இந்த நிதியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம்கேட்பதாகத்தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர்நிமல்புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்குப் பணமில்லை என்று கூறி வரும் ஜனாதிபதி இந்த நிதியைக் கொடுப்பது சந்தேகமே. இதனால் உள்ளூராட்சி சபைத் தேர்தல் மேலும் ஒத்திவைக்கப்படலாம்என்று அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகின்றது.

# நாடாளுமன்ற சிறப்புரிமை என்ற போர்வையில் நீதித்துறை, தேர்தல் ஆணைக்குழு மீது அழுத்தம்

## அரசைக் கடுமையாகச் சாடுகின்றார் சஜித்



ஜனாதிபதி தலைமையிலான அரசு, நாடாளுமன்ற சிறப்புரிமைகள் என்ற போர்வையில் நீதித்துறை மீதும் தேர்தல் ஆணைக்குழு மீதும் அழுத்தம் பிரயோகிக்கின்றது.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கட்டுவன பிரதேசத்தில் நேற்று (12) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டை அழித்து, மக்களின் வாழ்வைச் சீரழித்து மக்களை அழிவின் விளிம்புக்குச் இட்டுச் சென்ற முன்னாள் அரசுக்கும், தற்போதைய அரசுக்கும் தேர்தல் என்ற வார்த்தையைக் கேட்டாலே அச்சம் எழுந்துள்ளது. அவர்களால் மக்களிடம் செல்ல முடியாததாலையே அந்நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகவே யானை - காக்கை - மொட்டு தரப்புக்கள் மூன்றும் தேர்தலை ஒத்திவைக்கும் சதியில் ஈடுபட்டு வருகின்றன.

2023 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போதிலும் தற்போது தேர்தலுக்குப் பணம் இல்லை என்று கூறுகின்றனர்.

உயர் நீதிமன்றம் மக்கள் தரப்பில் பெரும் உத்தரவு பிறப்பித்து தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை வழங்க வேண்டும் என்று இடைக்காலத் தீர்ப்பு வழங்கினாலும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்பட்டதாக இந்த அரசு தவறான வாதத்தை உருவாக்கி அதன் மூலம் உயர் நீதிமன்ற நீதிபதிகள், தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களைச் சிறப்புரிமைக் குழுவுக்குக் அழைத்து, சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் பக்கச்சார்பற்ற நீதித்துறைக்கும் அழுத்தம் கொடுக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி தலைமையிலான இந்த அரசின் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதி செயற்படுத்தப்பட்டு வருகின்றது. சிறப்புரிமைக் குழுவின் பணிகள் முடியும் வரை இந்தச் சட்ட நடவடிக்கைகள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட வேண்டும் என்று அவர்களுக்கு ஆதரவளிக்கும் மக்கள் பிரதிநிதிகளிடம் கோரப்படுகின்றது.

எனவே, வாக்குரிமைக்காக வீதியில் இறங்கி ஜனநாயக உரிமைகளை மீறும் வகையில் செயற்படும் சர்வாதிகார அரசைத் தோற்கடிக்க மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் - என்றார்.






## 4 இந்திய மீனவர் படகுகள் சங்கங்களிடம் கையளிப்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 12

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லைதாண்டும் தமிழக படகுகளை பிடிப்பதற்கும் இடிப்பதற்குமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் உள்ளூர் மீனவர்களுக்கு வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்ட படகுகள் மீனவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இந்தப்படகுகளை கடற்றொழில் நீரியல் திணைக்களத்திடம் இருந்து ஞாயிற்றுக்கிழமை பெற்றுக் கொண்ட சங்கங்கள் பெற்று அவற்றைத் திருத்தும் பணிகளைத் தொடங்கியுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டும் இந்தியப் படகுகளை பிடிப்பதற்கும் இடிப்பதற்குமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அண்மையில் 4 விசைப் படகுகள் வடக்கு மாகாண மீனவ அமைப்புக்களிற்கு வழங்கப்பட்டன. இலங்கை கடற்பரப்பிற்கு எல்லை தாண்டிய சமயம் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு அரச உடமையாக்கப்பட்ட இந்திய மீனவர்களின் படகுகளே இவ்வாறு கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மீனவ அமைப்புக்களிற்கு வழங்கும் பத்திரங்களை கையளித்திருந்தார்.

இவ்வாறு வழங்கும் பத்திரங்களைப் பெற்ற சங்கங்களிடம் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள யாழ். மாவட்ட பிரதிப் பணிப்பாளர் சுதாகரன் படகுகளை கையளித்தார்.

படகுகளை பெற்றுக் கொண்ட சங்கங்கள் உடனடியாகவே படகுகளைத் திருத்தும் பணியைத் தொடங்கின. திருத்தப் பணிகள் முடிவுற்றதும் அவை எடுத்துச் செல்லப்படவுள்ளது. இதன்போது ஆரோக்கியமாதா என எழுதப்பட்ட படகு பருத்தித்துறை முனைச் சங்கத்திற்கும் எம்.எஸ்.ராஜ்குமார் என எழுதப்பட்ட 992 இலக்கப்படகு முல்லைத்தீவு மாவட்டச் சங்கத்திற்கும் வழங்கப்பட்ட நிலையில் அவற்றிற்கான திருத்தப் பணிகள் துரித கதியில் இடம்பெறுகின்றன.

## நடக்கும் …….

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான பின்னணியில் தபால்மூல வாக்கெடுப்பை எதிர்வரும் 28, 29, 30 மற்றும் 31 ஆகிய திகதிகளில் நடத்த தீர்மானிக்கப்பட்டது. நிதி வழங்கல் தாமதமானால், எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தபால்மூல வாக்கெடுப்புக்கான வாக்குச்சீட்டுக்களை ஒப்படைப்பது தாமதமாகலாம் என்று அரச அச்சக திணைக்களத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

தபால்மூல வாக்குச்சீட்டுக்களை புதன்கிழமை ஒப்படைப்பதாக அவர் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தார். ஆனால் இப்போது அந்த நிலைமை சாத்தியமாகாது என்பது தெளிவாகின்றது

மறுபக்கத்தில், உயர் நீதிமன்றம் பிறப்பித்த இடைக்காலத் தடையுத்தரவினால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகவும், இடைக்கால தடையுத்தரவை அடிப்படையாக கொண்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை இடைநிறுத்த நாடாளுமன்ற சிறப்புரிமை குழு அறிவிக்கவேண்டும் என்றும் ஆட்சித் தரப்பினர் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளதையும் அவதானித்துள்ளோம்.

இந்தக் கருத்துக்களினால் சட்டவாக்கம் மற்றும் நீதித்துறைக்கு இடையில் முரண்பாடுகள் தோற்றம் பெறுவதற்கே வாய்ப்புக்கள் அதிகமுள்ளது. ஆகவே சகல தரப்பினரது ஒத்துழைப்பும் இருந்தால் மாத்திரமே ஏப்ரல் 25 தேர்தலை நடத்த முடியும். நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்கு உண்டு என்பதையும் இந்த இடத்தில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# தொழிற்சங்க போராட்டத்தால் பாதிப்பு எதுவும் இல்லையாம்

தொழிற்சங்க போராட்டம் இந்த ஆட்சியின் செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தாது என சமூக நலன்புரி இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார்.

கொழும்பில் ஞாயிற்றுக் கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெற்றால் அரச கட்டமைப்பில் முரண்பாடுகள் மாத்திரமே தோற்றம்பெறும். தேர்தலில் ஒருவேளை மக்கள் விடுதலை முன்னணியும், ஐக்கிய மக்கள் சக்தியும் வெற்றிப் பெற்றால் உள்ளூர் அதிகார சபை நிர்வாகத்திற்கும், அரசுக்கும் இடையில் முரண்பாடுகள்தான் தோன்றும்.

தற்போதைய பொருளாதாரப்பாதிப்புக்குமத்தியில்தேர்தலை நடத்துவது அவசியமற்றது. நாடு என்ற ரீதியில் தற்போது தேர்தலுக்குத் தயார் இல்லை, நாட்டு மக்கள் தேர்தலைக் கோரவில்லை.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணவேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். அரசியல் கட்சிகள் ஏதும் மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் கருத்துரைப்பதில்லை.

ஆட்சியாளர்களின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் போராட்டத்தில் ஈடுபடுவதாக தொழிற்சங்கத்தினர் குறிப்பிடுவது அடிப்படையற்றது. புதிய வருமான வரிக்கு எதிர்ப்பு தெரிவித்து சுயநல நோக்கத்துடன் இவர்கள் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், தொழிற்சங்கங்களுக்கு அமைய செயற்பட்டால் பொருளாதார நெருக்கடிக்கு ஒருபோதும் தீர்வு காண முடியாது. தொழிங்சங்கப் போராட்டம் ஆட்சிச் செயற்பாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. சட்டவொழுங்குக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையிலான போராட்டங்களுக்கு இடமளிக்க முடியாது – என்றார்.

# அரசு அதன் உண்மை முகத்தை தெற்கு மக்களுக்கும் காட்டுகிறது


சுகாஷ் காட்டம்

தனதுபெயரில்ஜனநாயக சோசலிச குடியரசு என்று பெயரை மட்டும் தாங்கிக் கொண்டிருக்கின்ற இலங்கை அரசு, அதன் உண்மை முகத்தை தற்பொழுது சிங்கள மக்களுக்கும் காட்டி வருகின்றது என்பதுதான் உண்மை எனத் தமிழ்த் தேசியமக்கள்முன்னணியின் ஊடகப்பேச்சாளரும்சிரேஷ்ட சட்டத்தரணியுமான கனகரட்ணம்சுகாஷ்தெரிவித்துள்ளார்.

காரைநகர் ஒளிச்சுடர் விளையாட்டு கழகத்தின் மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கையினுடைய சிவில் சமூகத்தின் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய அனைத்து பல்கலைக்கழக மாணவர்களால் ஜனநாயக ரீதியில், அரசாங்கத்துக்கு எதிராகவும் மக்களுடைய குரலாகவும் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் மனிதாபிமான நெறிமுறைகளுக்கும் ஜனநாயக விழுமியங்களுக்கும் மாறாக கண்ணீர்புகை குண்டுகளை வீசி மக்களினுடைய - மாணவர்களுடைய - குரல் வளையை அடக்க முற்பட்டிருக்கிறது அரச இயந்திரம்.

ஆனால் அங்கு இரண்டு உயிர்கள் பறிக்கப்பட்டிருக்கின்றன. இது ஜனநாயகத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலுக்கு அப்பால் இலங்கையில் உண்மையில் ஜனநாயகமற்ற போர்வையில் சர்வாதிகார இராணுவ ஆட்சியை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது என்பதை சுட்டிக் காட்டுகின்றது.


கடந்த காலத்திலும் பல்வேறு சமயங்களில் இலங்கைத்தமிழ்மக்களுக்கு எதிராக, அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கிலேயே இராணுவ பயங்கரவாத ஆட்சி நடைபெறுகின்றது என்று குற்றச்சாட்டுமுன்வைத்தோம். இம்முறை எங்களுடைய குற்றச்சாட்டு உண்மை என்பதை அவர்கள் நிரூபித்து இருக்கின்றார்கள்.

புத்திஜீவிகளான சிங்கள மக்களும், உண்மையை உணரக்கூடிய சிங்கள மக்களும் சர்வதிகார தேசமும் உணர்ந்து கொண்டு, இனப்படுகொலையாளிகளால் வஞ்சிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு ஒரு நீதி கிடைப்பதற்கு அனைவரும் சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும் என வேண்டி நிற்கின்றோம். - எனத் தெரிவித்தார்.

# காட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஒரு லட்சம் கோழி முட்டைகள்!

## புத்தளம் நுகர்வோர் அதிகார சபை அதிரடி

பழுதடைந்தவை என சந்தேகிக்கப்படும் சுமார் ஒரு லட்சம் முட்டைகள் ஒரு வாரத்துக்குள் கொண்டு வரப்பட்டு மஹகும்புக்கடை வல்பலுவ வனப் பிரதேசத்தில் கொட்டப்பட்டுள்ளன என நுகர்வோர் அதிகார சபையின் புத்தளம் மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.



பிரதேசிவாசி ஒருவர் தமது அலுவலகத்துக்கு இது தொடர்பில் அறிவித்ததையடுத்து இதனைக் கண்டுபிடித்ததாக நுகர்வோர் அதிகார சபையின் புத்தளம் மாவட்ட அலுவலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# தெஹிவளை பாடசாலையின் மாணவனை துஷ்பிரயோகம்செய்த இரு மாணவர்கள்!

தெஹிவளை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 11 வயதுடைய மாணவன் ஒருவன் கொடூரமான முறையில் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் தெஹிவளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட இரு மாணவர்களும் அந்தப் பாடசாலையின் 10 ஆம் தரத்தில் பயிலும் மாணவர்கள் எனவும், பாதிக்கப்பட்ட மாணவன் அதே பாடசாலையில் 6 ஆம் தரத்தில் கல்வி பயில்பவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி மாணவனை சந்தேகிக்கப்படும் இரு மாணவர்கள் பல சந்தர்ப்பங்களில் கொடூரமான முறையில் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் தமக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

சந்தேக நபர்களான இரு மாணவர்களும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பில் தெஹிவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பெண்களுக்கு எதிரான வன்முறைக்கெதிராக கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டம்!



பெண்களுக்கெதிரான வன்முறை மற்றும் பொருளாதார நெருக்கடியிலிருந்து பாதுகாக்க கோரி கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று (ஞாயிற்றுக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச பெண்கள் தின நிகழ்வு நேற்று கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வு நேற்று காலை 9.30 மணியளவில் பெண்கள் அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் சிறிகாந்தி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மாவட்டத்தின் கரைச்சி பிரதேசத்திலிருந்து பெண்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது, பெண்களுக்கான தொழில் சார் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும், அதிகரித்த மின்கட்டணம் மற்றும் பொருளாதார நெருக்கடியால் பெண்கள் பாதிக்கப்படுகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அதிகளவில் நெருக்கடிக்குள்ளாகுகின்றன எனவும் தெரிவித்த அவர்கள், இதற்கான மாற்று ஏற்பாடுகளை அரசாங்கம் ஏற்படுத்தித் தர வேண்டும் எனவும் கோரியிருந்தனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.03.202இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 28 ஞாயிற்றுக்கிழமை 12.03.2023 கதிர் 375

## கைவிரித்தார் அரச அச்சகர்

தபால் மூல வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்கு இனிப் போதிய கால அவகாசம் இல்லையென்று அரச அச்சகத் திணைக்களத்தின் தலைவர் கங்கானி லியகே கைவிரித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வாக்குச்சீட்டுக்கள் உட்பட அச்சிடும் பணிக்காக 533 மில்லியன் ரூபா கோரப்பட்ட போதிலும், 339 மில்லியன் ரூபா இன்னும் நிலுவையில் உள்ளது, அதனால் அச்சிடும் பணிகள் முழுமையடையவில்லை.

தேர்தல் தொடர்பான 2,500 அச்சுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில், இதுவரை 54 பணிகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டுள்ளது.

அச்சுப் பணிகளை முன்னெடுப்பதாக இருந்தால் பாதுகாப்புத்துறையின் பங்களிப்பு இம்முறை 2

## தபால்மூல வாக்கெடுப்பு மீண்டும் நிச்சயமில்லை

### ரூ. 500 மில்லியன் வழங்க புதன்வரையில் கலக்கெடு

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால் மூலமான வாக்களிப்பு மீண்டும் நிச்சமற்ற நிலையை அடைந்துள்ளது. இன்னும் ஓரிரு தினங்களுக்குள் திறைசேரி 500 மில்லியன் ரூபாய் நிதியை விடுவிக்கவில்லை என்றால் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறுவது சாத்தியமில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தபால் மூலமான வாக்களிப்பு மார்ச் 28 ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரை நடத்துவது என்று தேர்தல்கள் திணைக்களம் முடிவு செய்தது. அதன்படி தேர்தல் திகதிகளை மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்களும் வர்த்தமானி மூலம் அறிவித்திருந்தனர். .

இந்நிலையில், எதிர்வரும் புதன்கிழமைக்குள் திறைசேரி 500 மில்லியன் ரூபாயை வழங்காவிட்டால் தபால்மூல வாக்களிப்புத் திகதிகளை மீண்டும் மாற்றி அறிவிக்க நேரிடும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஏப்ரல் 25ஆம் திகதி நடத்துவதற்கு வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. அதற்கான முழுமையான நிதியை மார்ச் 20 திங்கட்கிழமைக்குள் திறைசேரி வழங்கவேண்டும். அத்துடன் தபால் மூல வாக்களிகப்புக்கு 500 மில்லியன் தேவைப்படுகின்றது. அதனை எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னதாக வழங்கவேண்டும்.

தேர்தலுக்கான ஆயத்தப் பணிகளை மேற்கொள்வதற்கு இந்த மாத இறுதி வரை திறைசேரியிலிருந்து மொத்தம் 1,100 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது. அந்த நிதியையும் திறைசேரி விடுவிக்க வேண்டியுள்ளது.

இந்த விடயங்களை நாம் திறைசேரிக்கு அறிவித்துள்ளோம். அதேபோன்று நிதி அமைச்சரான ஜனாதிபதிக்கும் அறிவித்துள்ளோம். ஆகவே உரிய காலப்பகுதியில் நிதி கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். அப்படிக் கிடைக்காவிட்டால், நாம் உயர் நீதி மன்றத்திற்குச் சென்று நிதியைத் திறைசேரி ஒதுக்கீடு செய்யாதது குறித்து முறையிட நேரிடும்.

ஏற்கனவே எழுத்து மூலமான கோரிக்கைகள் திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் இது குறித்து திறைசேரியுடன் பேச்சு நடத்தும் திட்டம் ஏதும் இல்லை–என்றார்.

## தேர்தலைப் பிற்போடத் தூண்டிய குற்றச்சாட்டின் கீழ்

# பிரதமர் டினேஷுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

### ஐக்கிய மக்கள் சக்தி ஆராய்வு



பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் தீர்மானம் ஒன்றை முன்வைப்பது தொடர்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஆராய்ந்து வருகின்றது என அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போடுவதற்கு அரச அதிகாரிகளைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்படை இடைநிறுத்துமாறு பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை1ள் மற்றும் உள்–ளூராட்சி அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹெபுஹின்ன விடுத்திருந்த சுற்றறிக்கை அரசியல் களத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. 2

## தொலவத்தவின் உரிமைச் சிக்கல் சபையின் சிறப்புரிமை குழுவிடம்

திறைசேரி செயலாளர் மீதான உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி.தொலவத்த எழுப்பிய சிறப்புரிமைக் கேள்வியை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்ற நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் குழுவிற்கு அனுப்பி வைத்துள்ளார் என்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ உறுதிப்படுத்தினார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழுவின் தலைவராக முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச கடந்த புதன்கிழமை ஏகமனதாகத் தெரிவு செய்–யப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அவருடைய தலைமையிலான குழுவிற்கு இந்த சிறப்புரிமை விவகாரம் பரீசிலனைக்குச் சென்றுள்ளது. இது பற்றிக் கருத்தை அறிய சமல் ராஜபக்சவைத் தொடர்புகொள்ள முனைந்தபோதும் அது சாத்தியப்படவில்லை.

முன்னதாக, உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை முடக்கி வைப்பதை தடை செய்து, திறைசேரியின் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோருக்கு கடந்த மூன்றாம் திகதி உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவைப் பிறப்பித்திருந்தது.

இந்நிலையில் நெறிமு–றைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழு குறித்த சிறப்புரிமைக் கேள்வியை ஆராய முற்படுமாயின் இடைக் கால உத்தரவைப் பிறப்பித்த நீதிபதிகள் குழுவில் முன்னிலையாக வேண்டிய நிலைமைஸ உருவாகும் அது, சட்டவாக்கத்துறைக்கும், நீதித் துறைக்கும் முரண்பாடுகளை வலுப்படுத்தும் என்று எதிர்க்கட்சிகள் எச்சரித்துள்ளன.

## உள்ளூராட்சி தேர்தல் நிறுத்தப்பட்டால் ஐ.நா.சாசனம் மீறப்படுவதாக அமையும்

### லக்ஷ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டு




இலங்கை அரசியல் மற்றும் குடியியல் உரிமைகள் தொடர்பான பன்னாட்டு சாசனத்தில் கையொப்பமிட்டுள்ள நிலையில் உள்ளு ராட்சி தேர்தல் நடத்தப்படாமை, சர்வதேச சானத்தினை மீறு தாக அமையும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித் தார்.

கண்டியில் இன்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க தலைமையிலான ஆட்சி தேர்தலை நடத்துவதற்கு விரும்பவில்லை. இந்நிலையில் தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு பல்வேறு தடுப்பு முயற்சிகளை முன்னெடுத்து வருகிறது. இலங்கை அரச மைப்பில் தேர்தலை ஒத்திவைப்பதற்கு எவ்வித மான ஏற்பாடுகளும் இல்லை. 2

## கண்டி பெண் கொலை: படைச் சிப்பாய் கைது

### மோப்ப நாயின் உதவியால் சிக்கினார்



கண்டி – அலவத்துகொட பகுதியில் வயலில் இருந்து சடலமாகப் பெண் ஒருவர் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் தரைப் படைச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அலவத்துகொட பகுதியைச் சேர்ந்த சிப்பாயே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

கண்டி – அலவத்துகொட பகுதியில் வயலில் இருந்து பெண் ஒருவர் சடலமாக நேற்று மீட்கப்பட்டிருந்தார்.

26 வயதான குறித்த பெண் திருமணமானவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு வேளையில் குறித்த பெண்ணின் கணவர் சாவு வீடொன்றுக்குச் சென்று வீடு திரும்பிய போது, 2

## சப்ரகமுவ பல்கலையில் ஏழு மாணவர்கள் காயம்

### குழு மோதலால் வந்த வினை

சப்ரகமுவ பல்கலைக் கழகத்தில் நேற்று இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியின் போது ஏற்பட்ட கோஷ்டி மோதலில் 7 மாணவ, மாணவிகள் காயமடைந்து வைத்திய சாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவ பீடம் மற்றும் வர்த்தக பீடம் என்பவற்றுக்கிடையில் கரப்பந்தாட்ட போட்டி நடத்தப்பட்டதன் பின்னரே இரு தரப்பினருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது. 2

## வீதி விபத்துக்களில் 4 பேர் பரிதாபச் சாவு

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் கடந்த 24 மணித்தியாலங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிறுவன் ஒருவர் உட்பட 4 பேர் உயிரிழந்துள்ளனர். 2

## துப்பாக்கிகளுடன் குடும்பஸ்தர் கைது

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட இரண்டு துப்பாக்கிகளுடன் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஹியங்கனை அளுகாத்தியாவ – அல்தெனிய பகுதியில் குறித்த நபர் கைது செய்–யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளின் பின்னர் மஹியங்கனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள் ளார் என்று மஹியங்கனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## யானை தாக்கி ஒருவர் சாவு

யானை தாக்கி ஒருவர் உயிரிழந்த சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளது.

மொறவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்பிட்டிக்குளம் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வில்கம் விகார பகுதியைச் சேர்ந்த 53 வயதான எம்.ஏ.விதானலகே ஹரிச்சந்திர என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொறவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்தி நுவரெலியாவில் ஆர்ப்பாட்டப் பேரணி!



பெண்களின் தொழில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும், அரசியல் உட்பட அனைத்து விதமான உரிமைகளும் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தி நுவரெலியா – இராகலையில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

கண்டி சமூக அபிவிருத்தி ஸ்தாபனம், ராகலை நகர் பெண் சிவில் அமைப்புகள் மற்றும் பெருந்தோட்ட பெண் தொழிலாளர்கள் இணைந்தே இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

இராகலை நடுக்கணக்கு தோட்டப் பிரிவிலிருந்து ஆரம்பமான பேரணி, ராகலை நகர் வரை வந்து, அங்கு கூட்டம் நடத்தப்பட்டது.

தமது கோரிக்கைகளை முன்வைத்து பதாதைகளைத் தாங்கியபடியும், கோங்களை எழுப்பியவாறும் பேரணியில் பங்கேற்றோர் நகரை நோக்கி வந்தனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில்சார் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என இதன்போது விசேடமாக வலியுறுத்தப் பட்டது. அதேபோல் பெண்களுக்கு எதிரான வமுறைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் எடுத்துரைக்கப்பட்டது. வீட்டுப் பணிப்பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் காத்திரமான நடவடிக்கைகள் அவசியம் எனவும் சுட்டிக்காட்டப் பட்டது.

## வீதியைப் புனரமைத்து தருமாறு கோரி வீதியில் இறங்கிய மக்கள்





பூண்டுலோயாவிலிருந்து டன்சினன் வழியாக நுவரெலியா செல்லும் பிரதான பாதையை வெகுவிரைவில் புனரமைத்துத் தருமாறு வலியுறுத்தி, சுமார் 12 தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் இணைந்து இன்று மாபெரும் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

எதிர்ப்பு வசனங்கள் எழுதிய பதாதைகளை ஏந்திய வண்ணம், கோங்களை எழுப்பியவாறும், கறுப்புக் கொடிகளை தாங்கியவாறும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பூண்டுலோயா, கிகிலியாமான 3ஆம் கட்டை பகுதியிலிருந்து ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்ட பேரணி, டன்சினன் காந்திபுரம், டன்சினன் மத்திய பிரிவு, டன்சினன் கீழ்பிரிவு, சீன் கீழ்பிரிவு ஊடாக பூண்டுலோயா 2

## உள்ளூராட்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வகையில் நீதித்துறையையும் தேர்தல் ஆணைக்குழுவையும் அச்சம் ஊட்டுவதை இந்த ஆட்சி தற்போது ஒரு உபாயமாக கொண்டுள்ளது. அதேநேரம் இலங்கையானது,

அரசியல் மற்றும் குடியியல் உரிமைகள் தொடர்பான ஐநா சாசனத்தில் கையொப்பமிட்டுள்ளது. அந்த சாசனத்தின் 25ஆவது பிரிவில் தேர்தல்கள் நடத்தப்பட்டு மக்களின் ஜனநாயக உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே ஆட்சியாளர்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்தாது செயற்படுவார்களாக இருந்தால் அது சர்வதேச சாசனத்தை மீறும் செயலாகவே அமையும்.

அது மட்டுமின்றி சர்வதேசத்தின் உதவிகளையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலைமைகள் ஏற்படும். இது நாட்டுக்கு மேலும் நெருக்கடிகளை உருவாக்கும் – என்றார்.

## பிரதமர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரவை எடுத்த முடிவின் பிரகாரமே இந்த அறிவிப்பு வெளியானது எனவும் கூறப்பட்டது.

பின்னர் அமைச்சரவை அவ்வாறான தொரு முடிவை எடுக்கவில்லை எனக் கூறப்பட்டது. சுற்றறிக்கையும் மீளப்பெறப்பட்டது.

எனவே, தேர்தலைக் குழப்புவதற்குத் தனது செயலாளரைப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபை1ள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராகச் செயற்படும் பிரதமருக்கு எதிராகப் பிரேரணை கொண்டுவரப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் ஏனைய எதிர்க்கட்சிகளுடனும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் கலந்துரையாடி வருகின்றார் எனத் தெரியவருகின்றது.

## கை விரித்தார்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்படுத்தபட வேண்டியுள்ளது. அத்தரப்பினர் ஒத்துழைப்பு வழங்குவதாக அறிவித்துள்ள போதும், அவர்களுக்கான நிதி விடுவிக்கப்படாத பட்சத்தில் அவர்களும் பணிக்கு வருவார்கள் என்று உறுதிப்படுத்த முடியாது – என்றார்.

## வீதியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ் தரிப்பிடத்தை வந்தடைந்தது. அதன்பின் அங்கு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு, போராட்ட ஏற்பாட்டுக் குழுவால் ஊடக சந்திப்பும் நடத்தப்பட்டது.

12 தோட்டங்களைச் சேர்ந்த மக்கள், டன்சினன் பாதையின் விடியலுக்காக முன்னெடுக்கப்பட்ட பேரணிக்கு முழு ஆதரவையும் வழங்கினர். மதகுருமார்களும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

அத்தோடு, பூண்டுலோயா நகரங்களில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடதக்கது.

## கண்டி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனைவி வீட்டில் இருக்கவில்லை.

இதையடுத்து, அவர் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளுக்கமையவே குறித்த பெண் வயலில் இருந்து நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், மோப்பநாயின் உதவியுடன் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளை அடுத்து படைச் சிப்பாய் ஒருவர் கைதானார்.

சடலம் இருந்த இடத்திலிருந்து மோப்ப நாய் ஒன்று விடுவிக்கப்பட்டதையடுத்து, அந்த நாய் சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றி சிப்பாயின் வீட்டுக்குள் சென்று, சிப்பாயின் அறையில் நின்றுகொண்டது. அதன் பின்னரே அவர் கைது செய்யப்பட்டார். சடலமாக மீட்கப்பட்ட அந்தப் பெண்ணிடம் குறித்த சிப்பாய் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளார் எனவும், அதனைக் குறித்த பெண் நிராகரித்துள்ளார் எனவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சப்ரகமுவ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியில் தமது தோல்வியை ஏற்றுக்கொள்ளாத ஒரு பிரிவினரால் இந்த மோதல் ஏற்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

இதில் காயமடைந்த மூன்று மாணவர்களும், நான்கு மாணவிகளும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தப் போட்டி பல்கலைக்கழக நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 2 படகுகளில் 16 மீனவர்கள் இன்று கைது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.12

யாழ்ப்பாணம் கடற்பரப்பிற்குள் ஊடுருவிய இரு இந்திய விசைப் படகுகளில் பயணித்த 16 தமிழக மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

தமிழகம் புதுக்கோட்டை மற்றும் நாகைப்பட்னத்தைச் சேர்ந்த இரு படகுகளில் எல்லை தாண்டிய மீனவர்களே கைது செய்யப்பட்டனர்.

இதில் புதுக்கோட்டையைச் சேர்ந்த 81ஆம் இலக்க படகு அனலை தீவு கடற்பரப்பில் நான்கு மீனவர்களுடன் எல்லை தாண்டிய சமயமும்

நாகைப்பட்டினத்தின் 7818ஆம் இலக்கப் படகு 12 மீனவர்களுடன் வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் எல்லை தாண்டிய சமயமும் கைது செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட அனைவரும் மயிலிட்டித் துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டனர்.

இவர்களில் 12 மீனவர்கள் பருத்தித்துறை நீதிமன்றிலும் 4 மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றிலும் முற்படுத்தப்படுவர்.





## வீதி விபத்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திக்வெல்ல, கொடவுட பிரதேசத்தில் கிளை வீதியில் மிகவும் செங்குத்தான இடத்தில் சைக்கிளில் பயணித்த சிறுவன் சைக்கிளின் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

கொட்டகொட கொடஉட பிரதேசத்தில் வசிக்கும் 10 வயது சிறுவனே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

அதேபோல், அம்பலாங்கொட ரிதியகம வீதியில் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் மூன்று பேர் பயணித்துள்ளனர்.

அம்பலாங்கொடை பிரதேசத்தில் வசிக்கும் 21 வயது மற்றும் 25 வயதுடைய இருவரே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, ஹிக்கடுவ கருவாத் தோட்டம் ரயில் கடவையின் ஊடாக பாதுகாப்பற்ற முறையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு பெண்கள் ரயிலில் மோதியதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அளுத்கமவில் இருந்து காலி நோக்கிப் பயணித்த ரயிலில் மோதி விபத்துக்குள்ளானதில் ஹிக்கடுவ நலாகஸ்தெனிய பிரதேசத்தில் வசிக்கும் 45 வயதுடைய பெண்ணே உயிரிழந்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தொலவத்த, ஷெஹான் கருத்துக்கு சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்!

நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையைப் புறந்தள்ளும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பிரேம்நாத் தொலவத்த மற்றும் ஹொன் சேமசிங்க ஆகியோரால் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்தை சட்டத்தரணிகள் சங்கம் கடுமையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு –

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கை மேற்கோள்காண்பித்து நாடாளுமன்றஉறுப்பினர்களானபிரேம்நாத்தொலவத்த மற்றும் ஹொன் சேமசிங்க ஆகியோரால் வெளியிடப்பட்ட கருத்துக்களைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம்.

நீதிமன்றத்தின் இடைக்காலத்தடையுத்தரவு தமக்குரிய (நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய) நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறுவதாக கடந்த 7 ஆம் திகதி பிரேம்நாத் தொலவத்த தெரிவித்துள்ளார்.

அதேபோன்று பிரேம்நாத் தொலவத்தவின் கருத்து தொடர்பில் நாடாளுமன்ற சிறப்புரிமைகள் குழுவால் முன்னெடுக்கப்படும் விசாரணைகள் முடிவடையும்வரை உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத்தடையுத்தரவுடன் தொடர்புடைய எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்கவேண்டாமென சம்பந்தப்பட்ட கட்டமைப்புக்களுக்கு ஆலோசனை வழங்குமாறு நிதி இராஜாங்க அமைச்சர் ஹொன் சேமசிங்க கடந்த 10 ஆம் திகதி சபாநாயகரிடம் வேண்டுகோள்விடுத்தார்.

இவ்விரு கருத்துக்களும் நீதிமன்றச் செயன்முறையில் இடையூறு விளைவிப்பதுடன், நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மையைப் புறக்கணிப்பதாகவே நாம் கருதுகின்றோம். இலங்கை மக்களைப் பொறுத்தமட்டில் சுயாதீன நீதிமன்றக்கட்டமைப்பு இன்றியமையாதது என்பதுடன், நீதியை நிலைநாட்டுவதற்கு சுயாதீன நீதிமன்றக் கட்டமைப்பு அவசியம் என்பதை அரசின் அனைத்துக் கிளைக்கட்டமைப்புக்களும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

எனவே, சுயாதீன நீதிமன்றக்கட்டமைப்பில் ஏற்படுத்தப்படும் எந்தவொரு தலையீட்டையும் சட்டத்தின் ஆட்சி மற்றும் நாட்டு மக்களின் உரிமைகளை அவமதிக்கும் செயலாகவே கருதுகின்றோம். அத்தகைய அவமதிப்பு, எவ்வித பக்கச்சார்புமின்றி நீதியை நிலைநாட்டுவதற்கான நீதிமன்றத்தின் இயலுமையைப் பாதிக்கும்.

ஆகவே, நாட்டின் கடந்தகால வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தும் அதேவேளை, நீதிமன்றக்கட்டமைப்பின் சுயாதீனத்தன்மையைப் புறந்தள்ளும் வகையில் செயற்பட வேண்டாம் எனவும் வலியுறுத்துகின்றோம் என சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

# இலங்கையில் முதலீடுகளைச் செய்வதற்கு சர்வதேச முதலீட்டாளர்களுக்கு அழைப்பு!

## பிரித்தானியாவுக்கான இலங்கை பிரதிநிதி கஜன் விடுப்பு

இலங்கையில் முதலீடு செய்வதற்கு சர்வதேச முதலீட்டாளர்களுக்கு முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் பிரித்தானியாவுக்கான இலங்கை பிரதிநிதி கந்தையா கஜன் அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

சர்வதேச முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்ய வைப்பதற்கான பிரித்தானியாவுக்கான இலங்கை பிரதிநிதியாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சால் நான் நியமிக்கப்பட்டுள்ளேன். என்னுடைய நியமனம் இலங்கையின் பொருளாதார மீட்பின் ஒரு மிகப் பெரும் பங்காக இருக்கவேண்டும் எனநினைக்கின்றேன்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியாகப் பதவி ஏற்றுக்கொண்டதன் பின்னர் உலக நாடுகளிலுள்ள இலங்கை புலம்பெயர்ந்தோரை இலங்கையில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுத்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை நெருக்கடியில் இருந்து மீட்பதற்கு சர்வதேச நாடுகளிலுள்ளவர்களின் முதலீடுகள் மிக முக்கியமானவை. இலங்கையில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நெருக்கடியால் சர்வதேச முதலீட்டார்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்குத் தயக்கம் காட்டினர்.

தற்போது ஜனாதிபதியின், பொருளாதார மீட்புக்கான திட்டங்களால் இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சி பாதையை நோக்கிப் பயணிக்கின்றது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் உலக நாடுகளிலுள்ள சர்வதேச முதலீட்டாளர்களை இலங்கைக்கு அழைத்து வந்து அவர்களை இலங்கையில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கவே எனக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வமுள்ள அனைத்து சர்வதேச முதலீட்டாளர்களையும் இணைத்து இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்கான முயற்சியை எவ்வித தடையுமின்றி முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளேன்.

சர்வதேச முதலீட்டார்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு முன்னர் இலங்கையில் முதலீடு செய்வதற்கான பின் னணியை உருவாக்க வேண்டும்.

அதற்கு முன்னர் இலங்கையில் பாதுகாப்பான முறையில் முதலீடு செய்ய முடியும் என்ற நம்பிக்கையை முதலில் உறுதிப்படுத்த வேண்டும். அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவருகிறோம். முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பான முதலீட்டு துறை மற்றும் திட்டங்களை அறிமுகம் செய்யவுள்ளோம்.

அத்தோடு, தன்னிறைவு பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களையும் தயாரித்து வருகின்றோம்.

இதற்கு மேலதிகமாக, இலங்கையில் கல்வி, விவசாயம், மீன்பிடி, தொழில்நுட்பத் துறை என பலத்துறைகளில் முதலீடு செய்யும் வகையிலான திட்டங்களை தயாரித்துள்ளோம்.

இலங்கையில் சர்வதேச முதலீடுகள் அதிகரிக்கும் போது வேலைவாய்ப்புகளும் அதிகரிக்கும். இதனால், தற்போது நாட்டை விட்டு வெளியேறும் இளம் தலைமுறையினருக்கு இந்த நாட்டிலேயே இருந்து வேலை செய் வதற்கான வாய்ப்புகள் ஏற் படும்.

உதாரணமாக, கல்வித்துறையில் முதலீடுகள் அதிகரிக்கும் போது, அதிக பட்டதாரிகளை உருவாக்குவதற்கான பல்கலைக்கழக புலமைப் பரிசில்களை வழங்க முடியும்.

சர்வதேச பல்கலைக் கழகங்களில் படிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், படித் தப் பின் அவர்களுக்கு வேலை வாய்ப்புகளையும் நாங் களே ஏற்படுத்தியும் கொடுக்க திட்டங்கள் வகுத்துள்ளோம்.

தொழிற்கல்வித் திட்டங்களையும் பயிற்றுவிக்கும் செயற்பாடுகளையும் அறிமுகம் செய்யவுள்ளோம். மேலும் தகவல் தொழில்நுட்பத்தில் 'ஆஃப் ரோர்' நிறுவன வசதிகளையும், நாங்கள் அறிமுகம் செய்ய எதிர்பார்த்துள்ளோம்.

அனைத்துதுறைகளிலும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதிக வருமானத்தை ஈட்டும் முதலீட்டு திட்டங்களையும் தயாரித்து வருகின்றோம்.

அத்தோடு, முதலீட்டாளர்களுக்கான திட்டங்களை இனங்காட்டிக் கொடுப்பதுடன், திட்ட அனுமதி, திட்ட வரைவுகளையும் பெற்றுத் தருவதற்கான ஒழுங்குகளை செய்து வருகிறோம்.

எனவே, சர்வதேச நாடுகளில் இருக்கும் இலங்கையர்கள் மாத்திரமின்றி சர்வதேச முதலீட்டாளர்களையும் இலங்கையில் முதலீடு செய்யுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் சர்வதேச முதலீடுகள் இலங்கை பொருளாதாரத்தை மேலும் பலப்படுத்தும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

இதற்காக இலங்கையின் அனைத்துத் துறைகளிலும் பாதுகாப்பான, வருவாயை அதிகரிக்கக் கூடிய முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்போம். இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் பலப்படுத்தி, மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்துவதற்கு சர்வதேச முதலீட்டாளர்கள் கைகொடுக்க வேண்டும். கைகொடுப்பார்கள் என நான் திடமாக நம்புகிறேன்.

மற்றும் இந்தப் பணிகளில் ஊடகத்துறை என்பது மிகப்பெரிய பங்களிப்பை செய்கின்றது. எமது இந்த பணிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க உங்களின் ஆதரவை என்றும் எதிர்பார்க்கின்றேன். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நியாயமற்ற உயர் வரி அறவீட்டு வீதம் வரி ஏய்ப்புக்கு நாட்டில் வழிவகுக்கும்!

## நிபுணர்கள், புத்திஜீவிகள் எச்சரிக்கை

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் வேளையில், ஒரே தடவையில் வரிவருமானத்தை 200 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு முற்படுவது பொருத்தமற்றதாகும். வரியறவீட்டுவீதம் நியாயமற்றவகையில் மிகவும் உயர்வாகக் காணப்படும் போது வரி ஏய்ப்பில் ஈடுபடுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இது பல்வேறு வழி களிலும் நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதிக்கும் என்று துறைசார் நிபுணர்கள் மற்றும் புத்திஜீவிகள் எச்சரித்துள்ளனர்.

இலங்கைக்கு ஏற்றவாறான நியாயமானதும், வெளிப்படைத்தன்மை வாய்ந்ததும், பொறுப்புடன் கூடியதுமான வரியறவீட்டு முறைமை தொடர்பான 32 பக்கங்களைக்கொண்ட முன்மொழிவொன்று தொழில்சார் நிபுணர்களின் தொழிற்சங்கக்கூட்டணியால் வெளியிடப்பட்டுள்ளது.

பேராசிரியர் இந்திக கருணாதிலக, பேராசிரியர் அருண ரந்தாரச்சி, கலாநிதி ஹரித அளுத்கே, பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம, கலாநிதி சருடத்த இலங்கசிங்க, கலாநிதி மஞ்சுள ஹேரத், அனுபா நந்துல, மஞ்சுள சமரசிங்க, பிரசங்க ரணவத்த, கலாநிதி கசுன் குமாரகே மற்றும் மயூரி அமரசிறி ஆகியோர் இணைந்து தயாரித்திருக்கும் இந்த முன்மொழிவிலேயே மேற்கண்ட வாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு –

நாட்டில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வரியறவீட்டு முறைமை பெரும்பான்மையான ஊழியர்களுக்கு ஒரு சுமையாக மாறியிருக்கின்றது. ஏனெனில் அவர்களின் நிலையான வருமானத்தில் 'இலாபமாக' அமையக்கூடிய தொகை 'வரியாக' அறவிடப்படுகின்றது. வணிகங்களின் செலவினங்களைக் கருத்திற்கொள்ளாமல் அவர்களின் தேறிய வருமானத்தின் மீதும், ஊழியர்களின் ஏனைய செலவினங்களைக் கவனத்திற்கொள்ளாமல் அவர்களின் மொத்த வருமானத்தின்மீதும் வரி அறவிடப்படுகின்றது.

தற்போதைய வரியறவீட்டு முறைமை இந்த அடிப்படைக்கோட்பாடுகளை முற்றிலும் புறக்கணித்திருக்கின்றது. குறிப்பாக தற்போதைய முறைமையில் 'செலவினச் சலுகை' நீக்கப்பட்டுள்ளமை கவனத்திற்கொள்ளப்படவேண்டிய விடயமாகும். எனவே இந்த வரியறவீட்டு முறைமை நியாயமற்றதும், உரிய கோட்பாடுகளுக்கு முரணானதுமாகும்.

கடந்த 2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட பெறுமதிசேர்வரிக்குறைப்பே அரசவருமான வீழ்ச்சிக்குப் பங்களித்த முக்கிய காரணியாகும். எனவே, இந்த இழப்பை ஈடுசெய்வதற்கு பொருத்தமற்ற முறையில் வருமானவரியை அறவிடுவதென்பது, அந்தத் திட்டம் தோல்வியடைவதற்கே வழிவகுக்கும்.

அதேபோன்று இவ்வாண்டு வரவு, செலவுத்திட்டப் பற்றாக்குறை 2.4 ட்ரில்லியன் ரூபாவென அரசாங்கம் மதிப்பிட்டிருக்கும் நிலையில், இந்த வருட இறுதியில் 1667 பில்லியன் ரூபா வருமானத்தை அடைந்துகொள்ள வேண்டுமென எதிர்பார்ப்பது நடைமுறைச்சாத்தியமற்ற விடயமாகும். நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் வேளையில், ஒரே தடவையில் வரிவருமானத்தை 200 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு முற்படுவது பொருத்தமற்றதாகும்.

வரியறவீட்டு வீதம் நியாயமற்றவகையில் மிகவும் உயர்வாகக் காணப்படும்போது வரி ஏய்ப்பில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும். இது பல்வேறு வழிகளிலும் நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாகப் பாதிக்கும்.

எனவே, ஊழியர்களால் தாங்கிக்கொள்ளக்கூடிய வரியறவீட்டு வீதத்தை நடைமுறைப்படுத்தல், சிறிய – நடுத்தரளவிலான வணிக முயற்சிகள் மற்றும் விவசாயம் போன்ற விசேட துறைகளுக்குரிய சலுகைத் திட்டங்களை அறிமுகப்படுத்தல் போன்ற குறுங்கால நடவடிக்கைகளையும், அதிகரித்த வரியறவீட்டுக்குப் பதிலாக வரியறவீட்டுத்தளத்தை விரிவுபடுத்தல், வெளிப்படைத்தன்மை மற்றும் செயற்திறனை அதிகரிக்கும் வகையில் வரியறவீட்டு செயன்முறையை டிஜிற்றல்மயப்படுத்தல், சுயாதீன வரியறவீட்டு ஆணைக்குழுவைஸ்தாபித்தல், திருடப்பட்ட (மோசடி செய்யப்பட்ட) சொத்துக்களை மீளப்பெறுவதற்கான சட்ட நடவடிக்கையை முன்னெடுத்தல் போன்ற நடுத்தரகால நடவடிக்கைகளையும், பொருளியல் சூழ்நிலையை அடிப்படையாகக்கொண்ட ஆழமான ஆய்வின் பிரகாரம் பொருளாதாரக்கொள்கையைத் தயாரித்தல், வெளிப்படையானதும் பொறுப்புக்கூறும்தன்மைவாய்ந்ததுமான வரியறவீட்டுக்கொள்கையை உருவாக்கல் உள்ளிட்ட நீண்டகால நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்கவேண்டியது அவசியமாகும் என்று அந்த முன்மொழிவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# ஆலங்குழாயில் குருதிக் கொடை

## 45 பேர் பங்கேற்றுத் தானம்



தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பழைய மாணவரும் புகழ்பூத்த விளையாட்டுவீரருமாகிய அமரர்.ச.சதீஸ் கண்ணாவின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரின் நிதி அனுசரணையில் குருதிக்கொடை நிகழ்வு சண்டிலிப்பாய் ஆலங்குளாய் சனமூக நிலையத்தில் சனிக்கிழமை

காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை சிறப்புற நடைபெற்றது.

வடக்கின் ஒரேயொரு புற்றுநோய் வைத்தியசாலையாகிய தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் குருதி வங்கியில் ஏற்பட்டுள்ள குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் வகையில் இந்தக் குருதிக்கொடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு, 45 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் இந்த உன்னதமான உயிர்க்கொடை நிகழ்வில் பங்குகொண்டனர்.

இந்த நிகழ்வை சண்டிலிப்பாய் பிரதேசசெயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகப் பணியாற்றும் சி.கஜன் ஒழுங்கமைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜெனிவா செல்கிறார் கஜேந்திரகுமார்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 52 ஆவது கூட்டத்தொடர் நடைபெற்று வரும் நிலையில் எதிர்வரும் 15 ஆம் திகதி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஜெனிவாவுக்குச் செல்லவுள்ளார்.

இந்தப் பயணத்தின் போது ஐ.நாவின் முக்கிய பிரதிநிதிகளுடன் சந்திப்புகளைச் செய்யவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஜெனிவாவுக்கான பயணம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அவர் –

இலங்கையில் தற்போது நடைபெறுகின்ற பிற்போக்குத் தனமான ஜனநாயக விரேதமான செயற்பாடுகளை ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கவனத்துக்குக் கொண்டு செல்வதே பிரதான நோக்கமாகவுள்ளது.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதோடு, அதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்த வேண்டும் என்பதை நாம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.



ஆனால், அரகலய போராட்டத்துக்குப் பின்னர் ஆட்சியில் அமர்ந்துள்ள ரணில் விக்கிரமசிங்க தன்னை ஜனநாயகவாதிகாக பிம்பப்படுத்திக்கொண்டாலும், அவர் நாட்டை சர்வாதிகாரத்தை நோக்கியே நகர்த்திச் செல்கின்றார்.

அத்துடன், சர்வதேசத்தை ஏமாற்றும் நடவடிக்கைகளையும் அவர் தொடர்ச்சியாக முன் னெடுத்து வருகின்றார். இவ்வாறான நிலையில் தமிழ் மக்கள் பொறுப்புக்கூறலையே, இனப்பிரச்சினைக் கான தீர்வையோ அவரிடத்திலிருந்து எதிர்பார்க்க முடியாது.

இந்த விடயங்கள் உட்பட ஏனைய மனிதாபிமான சட்டுடங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேசத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளேன். – என்றார்.

# நாட்டு மக்களின் வாக்குரிமையை பாதுகாக்க எதிர்கட்சிகளை ஒன்றிணைத்து போராடுவோம்!

## விஜித ஹேரத் அறைகூவல்

ஏப்ரல் 25 ஆம் திகதி உள்ளூராட்சிமன்ற சபைத் தேர்தல் வாக்கெடுப்பு இடம் பெறுமா அல்லது அரசாங்கத்தின் நோக்கத்துக்கு அமைய தேர்தல் பிற்போடப்படுமா என்ற சந்தேகம் காணப்படுகிறது. ஆகவே வாக்குரிமையை பாதுகாக்க சகல எதிர்க் கட்சிகளையும் ஒன்றிணைத்து போராட்டத்தில் ஈடுபடுவோம் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பொல்காவெல பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளுக்கும் நீதிமன்றம் முற்றுப்புள்ளி வைத்துள் ளது. அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்த பின்னணியில் அவர் தற்போது நாடாளுமன்ற சிறப்புரிமையை குறிப்பிட்டுக் கொண்டு ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் ஊடாக உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு தடையேற்படுத்தத் தீர்மானித்துள்ளார்.

எதிர்வரும் 28 ஆம் திகதி தபால்மூல வாக்கெடுப்பை நடத்தவும், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தவும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது, ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு அமைய உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இடம்பெறுமா என்பது சந்தேகத்துக்குரியதாக உள்ளது.

பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் தேர்தலை நடத் தினால் பொருளாதார பாதிப்பு தீவிரமடையும் என ஆளும் தரப்பினர் குறிப்பிடுகிறார்கள்.

அவ்வாறாயின் தற்போது அமைச்சரவை அமைச்சுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் போது மாத்திரம் பொருளாதாரம் பாதிக்கப்படாதா தேர்தலை நடத்த கூடாது என்ற நிலைப்பாட்டில் ஆளும் தரப்பினர்கள் உள்ளார்கள், தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் உள்ளன. தனிநபர் ஒருவர் நாட்டு மக்களின் ஜனநாயக உரிமைகளைத் தீர்மானிக்கும் போது ஜனநாயகம் கேள்விக்குள்ளாக்கப்படும். நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்க சகல எதிர்க்கட்சிகளை யும் ஒன்றிணைத்து போராடுவோம். அதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைளை கடந்த 9 ஆம் திகதி ஆரம்பித்துள்ளோம். –என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நல்லவேளை தேர்ந்தெடுக்கவில்லை

அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்கொன்றில் உச்ச நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை விமர்சித்து அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கைகள் இலங்கையின் நீதித்துறையின் சுதந்திரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் ஆழ்ந்த கரிசனை வெளியிட்டிருப்பது கவனத்திற்குரியது.

நீதித்துறையின் சுதந்திரமானது இலங்கை மக்களின் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாகும், மேலும் குடிமக்களுக்கு நீதி வழங்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு சுயாதீனமான நீதித்துறை அவசியம் என்பதை அரசின் அனைத்து உறுப்புகளும் அங்கீகரிக்க வேண்டும்.

1977 இல் பிரதம நீதியரசர் விக்டர் தென்னகோனுக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை நிகழ்வின் போது, அப்போதைய ஜனாதிபதி ஜேஆர். ஜயவர்த்தன உரையாற்றிய போது, இந்த நாட்டின் நீதிமன்றங்கள், இனம், மதம் எதுவாக இருந்தாலும், எமது அரசமைப்பிற்கு உட்பட்ட ஒவ்வொரு மனிதனின் நலனுக்காகவும் திட்டமிடப்பட்டு பொறிக்கப்பட்ட அரசமைப்புக் கேடயமாகும். மனித சுதந்திரத்திற்கான இந்த மாபெரும் உத்தரவாதத்தை பராமரிப்பதை விட உயர்ந்த கடமை, எந்தவொரு பொறுப்பும் நீதிபதி மீது இல்லை என்றார்.

இவ்வாறு சட்டத்தரணிகள் சங்கம் இதுதொடர்பில் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தேர்தலை நிறுத்துவதற்காகச் செய்யப்படும் பல்வேறு சூழ்ச்சிகளினால் இன்று முழு இலங்கையும் குழம்பிப்போயுள்ளது. கோட்டாபய ராஜபக்சவின் காலத்தில்கூட இவ்வளவு நிர்வாகக் குழப்பங்கள் ஏற்பட்டதில்லை. கடும்போக்கு–வாதியாக அறியப்பட்ட அவரால் நீதித்துறை அச்சுறுதலுக்கு உள்ளாக்கப்பட்டதான உணர்வு ஏற்பட்டதில்லை. ஆனால், மக்களாட்சியின் காவலர் என்று அறியப்பட்ட, கொண்டாடப்பட்ட, மக்களாட்சியை மீட்பதற்காகவென்று ஒரு தடவை தலைமை அமைச்சராக (பிரதமர்) பதவியில் அமர்த்தப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றுத்துறை மக்களாட்சியின் மற்றைய அனைத்துத் துறைகளையும் கேள்விக் குட்படுத்துகின்றது.

நிறைவேற்று அதிகாரம் என்பது கூரியவாள், அது யார் கையில் இருக்கிறது என்பதைப் பொறுத்தே அதன் ஆக்கமும் அழிவும். இப்போது அந்த வாள் எந்தவிதமான ஆக்கத்தையும் முன்னெடுப்பதற்குப் பயன்படுவதாகத் தெரியவில்லை.

தான் நினைத்ததை நடத்தி முடிப்பதற்காக சட்டத்தையும் சபைகளையும் எப்படி வேண்டுமானாலும் வளைப்பேன் என்கிற அரச தலைவரின் செயற்பாடு சர்வாதிகாரத்தனத்தின் உச்சமே. நாட்டிற்கு நன்மை பயப்பதற்காக என்றாலும் இத்தகைய சர்வாதிகாரப் போக்கு ஒருபோதும் நன்மையளிக்கப்போவதில்லை.

இந்த நிலையில் ஒன்றே ஒன்றுதான் தோன்றுகின்றது, நல்லவேளை இதற்கு முன்னர் ஒரு தடவைகூட தேர்தலில் மக்கள் ரணிலை அரச தலைவராகத் தேர்ந்தெடுக்கவில்லை.

# மேல், தென், மத்திய, கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சை தவிர வேறு எந்த சேவையும் திங்கள் இல்லை!

## வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவிப்பு

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய வரிக்கொள்கையை மீளப்பெறுமாறு வலியுறுத்திய அரச மருத்து அதிகாரிகள் சங்கம் நாளை (திங்கட்கிழமை) 4 மாகாணங்களில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது.

தமக்கான தீர்வுகள் கிடைக்கப் பெறாதபட்சத்தில் செவ்வாய்கிழமை முதல் ஏனைய அனைத்து மாகாணங்களிலும் தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

அத்தோடு எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை துறைமுகம், பெற்றோலியம், மின்சக்தி, நீர்வழங்கல், கல்வி, உயர்கல்வி, தபால், வங்கி உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தொழிற்சங்கங்களும் சகல சேவைகளும் முடங்கும் வகையில் அடையாள வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடவுள்ளன எனவும் அறிவித்துள்ளன.

வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த வாரங்களில் எம்மால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களுக்கு இதுவரையிலும் அரசாங்கத்தால் உரிய பதில் வழங்கப்படவில்லை.

எனவே இனிவரும் நாள்களில் எமது போராட்டத்தைத் துரிதப்படுத்தத் தீர்மானித்துள்ளோம். அதற்கமைய திங்கட்கிழமை முதல் முற்கட்டமாக 4 மாகாணங்களில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய மேல், தென், மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுகாதார நிலையங்கள், வைத்தியசாலைகள் உள்ளிட்ட சகல மருத்துவ சேவை நிலையங்களில் வைத்தியர்கள், சிற்றூழியர்கள் உள்ளிட்ட அனைவரும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

திங்கட்கிழமை காலை 8 மணி முதல் இந்த மாகாணங்களில் தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆரம்பமாகும். அரசாங்கத்தால் இன்று ஸ்திரமான பதில் வழங்கப்பட்டால் தொழிற்சங்க நடவடிக்கையை கைவிட முடியும்.

எவ்வாறிருப்பினும் சிறுவர் வைத்தியசாலைகள், பெண்கள் வைத்தியசாலைகள், புற்றுநோய் வைத்தியசாலைகள், மனநல வைத்தியசாலைகள், சிறுநீரக வைத்தியசாலைகள், இராணுவ வைத்தியசாலைகள் என்பவற்றில் மாத்திரம் வழமையான வைத்திய சேவைகள் முன்னெடுக்கப்படும். ஏனைய சகல வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சை பிரிவுகளைத் தவிர வேறு எந்தவொரு சேவையும் இடம்பெறா.

திங்கட்கிழமை எம்மால் முன்னெடுக்கப்படும் இந்த தொழிற்சங்க நடவடிக்கையையும் அரசாங்கம் உதாசீனப்படுத்துமானால் வடக்கு, வட மத்திய, வட மேல், சப்ரகமுவ மற்றும் ஊவா மாகாணங்களிலும் தொழிற்சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இன்று அரசாங்கத்திடமிருந்து உரிய பதில் கிடைக்குமானால் இந்த மாகாணங்களிலும் முன்னெடுக்க தீர்மானித்துள்ள தொழிற்சங்க நடவடிக்கையை இடைநிறுத்த முடியும்.

மாறாக, அன்றைய தினத்திலும் அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்காவிட்டால், 15 ஆம் திகதி புதன்கிழமை சகல தொழிற்சங்கங்களும் இணைந்து நாடு முற்றாக முடங்கும் வகையில் தொழிற்சங்க நடவடிக்கையைத் தீவிரப்படுத்துவோம்.

அவ்வாறு நாடு முடங்கும் பட்சத்தில் அதனால் மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களுக்கு அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும். புதிய வரி வசூலிப்பு திட்டத்தை அரசாங்கம் மீளப்பெறும் வரை எமது போராட்டம் கைவிடப்பட மாட்டாது. – என்று தெரிவித்தார்.

# அந்நிய செலாவணி அதிகம் கிடைத்தமையே ரூபாவின் பெறுமதி வேகமாக எகிறக்காரணம்!

## பந்துல விளக்கம்



ரூபாவின் பெறுமதி, கடந்த சில வாரங்களாக அதிகரித்து வருவதற்குக் காரணம் வெளிநாட்டு அந்நிய செலாவணி அதிகமாக நாட்டுக்கு கிடைத்து வருகின்றமையே என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ரூபாவின் பெறுமதி குறைந்து செல்வதை தடுப்பதற்காக மூன்று வருட காலத்தில் ஐந்து பில்லியன் டொலர்கள் விடுவிப்பு இடம்பெற்றுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அந்த வகையில் கடந்த சில வாரங்களாக ரூபாவின் பெறுமதி அதிகரித்தமைக்கு காரணம் டொலர்கள் விற்பனை செய்தமை அன்றி நாட்டுக்கு அதிகளவு வெளிநாட்டு அந்நிய செலாவணி கிடைத்துள்ளமையே இதற்குக் காரணம்.

சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்தமை, வெளிநாட்டு வேலை வாய்ப்புகளில் ஈடுபட்டுள்ள இலங்கையர் நாட்டுக்கு அதிகளவு டொலர்களை அனுப்பியமை, டொலர்களை வைத்திருந்தோர் அதனை விரைவாக விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்தமை மற்றும் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு வழங்கவுள்ள கடன் தொடர்பில் ஏற்பட்டுள்ள நம்பிக்கை உள்ளிட்ட பல காரணங்கள் ரூபாவின் பெறுமதி அதிகரிப்பதற்குக் காரணமாகியுள்ளன.

ரூபாவின் பெறுமதியை வீழ்ச்சியடையாமல் முன்னெடுத்துச் செல்வதற்காக மத்திய வங்கி, கடந்த 2012, 2015, 2016 மற்றும் 2018 ஆம் வருடங்களில் பாரிய தலையீடுகளை மேற்கொண்டது.

அந்த வகையில் ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்காக மத்திய வங்கி அவ்வப்போது பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளது.

2015ஆம் ஆண்டு மத்திய வங்கியின் அந்நிய செலாவணி விற்பனை அளவு (சந்தைக்கு விடுவிக்கப்பட்ட அளவு) 3,253 மில்லியன் அமெரிக்க டொலர் என்றும் 2016 ஆம் ஆண்டு அது 768 மில்லியன் டொலராகவும் அதேவேளை 2018 ஆம் ஆண்டு அது 1,120 மில்லியன் டொலராகவும் காணப்பட்டுள்ளது. அந்த மூன்று வருடங்களில் ஐந்து பில்லியன் டொலருக்கு மேல் சந்தைக்கு விடுவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# விவாகரத்துக்கள் நாட்டில் அதிகரிப்பு!

## சட்ட உதவி ஆணைக்குழு தகவல்

பெரும்பாலான இலங்கையர்கள் விவாகரத்து மற்றும் பராமரிப்பு வழக்குகளுக்கு சட்ட உதவி கோரியுள்ளதாக இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


2022 ஆம் ஆண்டில் மாத்திரம் 8 ஆயிரத்து 431 விவாகரத்து வழக்குகளுக்கு சட்ட உதவி வழங்கப்பட்டுள்ளது.

பராமரிப்பு வழக்குகள் மற்றும் குடும்ப வன்முறை வழக்குகளில் குழந்தைகள், பெண்கள் மற்றும் பெரிய-வர்களுக்கு அவர்களின் வருமான பதிவுகளை அழைக்காமலேயே சட்ட உதவி வழங்கப்படுகிறது.

சனத்தொகையை பொறுத்தமட்டில் கிழக்கு மாகாணத்தில் இருந்து அதிகளவான பராமரிப்பு வழக்குகள் பதிவாகியுள்ளன என இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் கௌசல்யா ஹப்பு ஆராச்சி தெரிவித்தார்.

'2011 முதல் 2021 வரையான 10 ஆண்டுகளில் 9916,540 பேருக்கு சட்ட உதவி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு மாத்திரம் 169,215 பேருக்கு சட்ட ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் 49,479 பேர் சட்ட நடவடிக்கைகளில் ஆஜராகியுள்ளதாக பிரதிப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்



# சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்குக் கடன் வழங்க பொருளாதார நிர்வாகம் தொடர்பாக கட்டுப்பாடு விதிப்பு!

இலங்கைக்கான கடன் வழங்கு–வதற்காக சர்வதேச நாணய நிதியம் கிட்டத்தட்ட ஒப்புதல் அளித்துள்ள நிலையில், உள்நாட்டு பொருளாதார நிர்வாகம் தொடர்பான சில கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மத்திய வங்கியால் பணம் அச்சிடுவது கடுமையான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்ட முதல் விடயமாகும். அதற்கு நிதி வரம்பு விதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

ரூபாவின் வீழ்ச்சியைத் தடுப்பதற்காக, மத்திய வங்கியும் டொலர்களை செலவழிக்க ஒரு குறிப்பிட்ட வரம்பை விதிக்கவுள்ளது.

ரூபாவின் மதிப்பு சுதந்திரமாக தீர்மானிக்கப்பட வேண்டும் என்பது நாணய நிதியத்தின் கொள்கையா கும்.

அவ்வாறு செய்தால் ஒரு டொலருக்கான ரூபா மதிப்பு மீண்டும் உயரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அனைத்து கட்டுப்பாடுகளுக்கும் மேலதிகமாக, தவறான தகவல்களை சமர்ப்பித்து நாட்டின் நலன்புரி நன்மைகளை பெறும் நபர்களை நீக்குமாறு சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு அறிவுறுத்தியுள்ளது.

இந்த அறிவுறுத்தல்களுக்கு உட்பட்டால், இலங்கைக்கான 29 கோடி அமெரிக்க டொலர் கடனை சர்வதேச நாணயநிதியம் அங்கீகரிக்கும். அதற்கான இயக்குநர்கள் குழு கூட்டம் இம்மாதம் 20ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீடுகளை விட்டு வெளியேறும் துருக்கியத் தலைநகர மக்கள்



## நிலநடுக்கத்தைத் தாங்கமாட்டா என்ற அச்சமே காரணம்

துருக்கியில் அண்மையில் 50 ஆயிரம் பேர் வரையிலானோரின் உயிர்களைக் காவு கொண்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து தலைநகர் இஸ்தான்புல்லில் இருப்பவர்களும் அச்சமடைந்துள்ளனர். நிலநடுக்கத்தால் இடிந்து நொருங்கக்கூடும் எனக் கருதப்படும் வீடுகளில் இருந்து பல குடும்பங்கள் வெளியேறி வருகின்றன.

"உயிருடன் புதைந்து விடுவோமோ என்ற அச்சமே" அதற்குக் காரணம். இந்த அச்சத்தால் நிலநடுக்கத்தைத்தாங்கக்கூடிய கட்டடங்கள் அல்ல என்று அடையாளப் படுத்தப்படும் வீடுகளில் நீண்ட காலமாக வசித்தவர்கள்கூட அவற்றைவிட்டு பாதுகாப்பானவீடுகளுக்கு இடம்பெயரத் தொடங்கியுள்ளனர். இதனால், அங்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது.

15 வருடங்களாகத் தான் வசித்துவந்த வீட்டிலிருந்து வெளியேறி இருக்கிறார் மெசுட் முத்தலி போக்லு. படுக்கையறைச் சுவர்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டு ஏற்கனவே காரை பெயர்கின்றது. நிலநடுக்கம் ஏற்பட்டால் அந்த வீடு நொருங்கிவிடும் என்கிற அச்சத்தில் அந்த வீட்டைவிட்டுக் குடும்பத்தினருடன் அவர் வெளியேறியிருக்கிறார்.

நிலநடுக்கத்தைத் தாக்குமா என்கிற பாதுகாப்பு சோதனையில் தாங்கள் வாழும் கட்டடம் தோல்வியடைந்ததால் வாழத் தகுதியற்றது என்று அந்தக் கட்டடம் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது என்கிறார் போக்லு.2030ஆம்ஆண்டுக்குள்இஸ்தான்புல்லில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்படும் என்று ஏற்கனவே கணிக்கப்பட்டிருக்கும் நிலையில், பாதுகாப்பற்ற கட்டடங்களில் வாழ்பவர்கள் பெரும் அச்சமடைந்திருக்கிறார்கள்.

தெற்கு மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட 7.8 புள்ளி ரிச்டல் அளவிலான நிலநடுக்கத்தால் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டமையும், பலர் மீட்கப்படாமல் உயிருடன் புதையுண்டு போனமையுமே அதற்குக் காரணங்கள்.

தலைநகர் இஸ்தான்புல்லில் ஒன்றரைக் கோடி பேர் வாழ்க்கிறார்கள். தெற்கில் ஏற்பட்டதுபோன்ற நிலநடுக்கம் தலைநகரைத் தாக்கியிருந்தால் உயிரிழப்பு இன்னும் அதிகமானதாக இருந்திருக்கும்.

இஸ்தான்புல்லில் 1999ஆம் ஆண்டே கடுமையான கட்டுமானத் தரநிர்ணயங்கள் கொண்டுவரப்பட்டுவிட்டன. நிலநடுக்கங்களைத் தாங்கக்கூடியவகையில் கட்டடங்கள் அமையவேண்டும் என்பதற்காகவே அந்தத் தரநிர்ணயங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால், நகரத்தில் உள்ள 70 சதவீதக் கட்டடங்கள் அந்த விதிகள் வருவதற்கு முன்பே கட்டப்பட்டவை.

மேலும் அவை பாதுகாப்பற்றவை என்று கருதப்படுகின்றன. மூன்று மாதங்களுக்கு முன்பு, இங்கு நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தால் குறைந்தது 90,000 பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என்று ஒரு ஆய்வு கூறியது. இப்போது,

இதனால் இஸ்தான்புல்லில் தமது கட்டடங்களின் தரத்தைச் சோதனை செய்வதற்காக அதிகாரத் தரப்புகளுக்கு விண்ணப்பிப்போரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. அவர்கள் மாதக்கணக்கில் தமது முறைக்காகக் காத்திருக்கின்றார்கள்.

தெற்கில்நிலநடுக்கம்ஏற்பட்டதில்இருந்து, கட்டட பாதுகாப்பு சோதனைகளுக்காக இஸ்தான்புல்நகராட்சிக்கு ஒரு லட்சத்துக்கும் மேற்பட்டபுதியவிண்ணப்பங்கள்வந்துள்ளன என்றார் அதிகாரி ஒருவர். அவற்றில் எத்தனை கட்டடங்கள் தரநிர்ணயத்தில் தோல்வியடைந்த என்ற புள்ளிவிவரங்களைப் பெற முடியவில்லை.

# 1000 அகதிகளுடன் 3 படகுகள் இத்தாலியக் கடலில் மீட்பு



குடியேற்றவாசிகள் நிரம்பிய மூன்று படகு கள் இத்தாலியக் கரைக் குப் பாதுகாப்பாக்க் கொண்டு வரப்பட்டிருக்கின்றன என்று அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

கடந்த மாதம் இத்தாலியக் கடலில் இரு அகதிக் கப்பல்கள் கவிழ்ந்ததில் பலர் உயிரிழந்தனர். மேலும் பலர் காப்பாற்றப்பட்டனர். இதனையடுத்து சனிக்கிழமை இத்தாலியக் கடலில் படகுகள் அவதானிக்கப்பட்ட உடனேயே கரையோரக் காவல் படையினர் அந்தப் படகுகளை இத்தாலியக் கரைக்குக் கொண்டு வந்து சேர்த்தனர்.

ஏறக்குறைய இரண்டு வாரங்களுக்கு முன்பு நடந்த படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை இதுவரையில் 76 ஆக உயர்ந்துள்ளது. கடைசியாக மீட்கப்பட்ட சடலங்களில் 10 வயதுக்குட்பட்ட இரண்டு சிறுமிகளின் சடலங்களும் அடக்கம்.

இந்த விபத்தை அடுத்து இத்தாலியின் ஆட்சியாளர்கள் கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டனர். சரியான நேரத்தில் தலையிட்டு அகதிகளைக் காப்பாற்ற பிரதம மந்திரி ஜியோர்ஜியா மெலோனி தலைமையிலான வலதுசாரி ஆட்சி தவறிவிட்டது என்று எதிர்க் கட்சிகள் சாடின.

படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி சனிக்கிழமையன்று குட்ரோ–விலில் ஓர் நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் பெரிய அளவிலான சிலுவை ஒன்றையும் சுமந்து சென்றனர். ஆயிரக்கணக்கானவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். இது அரசுக்கு மேலும் அழுத்தத்தை வழங்கியது.

இந்த சிலுவை இன்று துன்பத்தின் சின்னமாக உள்ளது என்று அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்ட நகரின் முன்னாள் மேயர் டொமினிகோ மிம்மோ லுகானோ கூறினார்.

இதற்கிடையே, இத்தாலியக் கடலில் மேலும் மூன்று அகதிப்படகுகளைக்கடலோரக்காவல்படை அவதானித்தது. அவற்றை உடனடியாக மீட்கும் பணிகள் தொடங்கப்பட்டன. அந்தப் படகுகளில் அகதிகள் பலர் இருப்பதும் கண்டறியப்பட்டது. கடலோரக் காவல்படையின் உதவியுடன் மூன்று படகுகளும் கரைக்குக் கொண்டுவரப்பட்டன. முதல் படகில் இருந்த 487 புலம்பெயர்ந்தோர் சனிக்கிழமை காலை குரோடோன் துறை முகத்தில் பாதுகாப்பாக இறக்கப்பட்டனர்.

மற்றொரு படகில் இருந்து 500 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# சீனாவின் புதிய பிரதமராக லீ கியாங் சனியன்று தெரிவு



சீனாவின் புதிய பிரதமராக அதிபர்ஷி ஜின்பிங்கின் நம்பிக்கைக்குரிய லீ கியாங் (வயது 63) சனிக்கிழமை தோவு செய்யப்பட்டார். நாடாளுமன்றக் கூட்டத்தில் இதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

கடந்த 10 ஆண்டுகளாக பிரதமராகப் பதவி வகித்து வரும் லீ கெகியாங்குக்கு (வயது 67) பதிலாக புதிய பிரதமராக லீ கியாங் தோவு செய்யப்பட்டுள்ளார்.

சீன நாடாளுமன்ற கூட்டத்தில் புதிய பிரதமா பதவிக்கு லீ கியாங் பெயரை அதிபா ஷி ஜின்பிங் முன்மொழிந்தா. மொத்தம் உள்ள 2,947 உறுப்பினாகளில் 2,936 போ லீ கியாங்குக்கு ஆதரவாக வாக்களித்தனர். மூவர் எதிர்த்து வாக்களித்தனர் எட்டு போ வாக்களிக்கவில்லை.

இதையடுத்து, லீ கியாங் அரசமைப்புச் சட்ட உறுதிமொழியை ஏற்றுக் கொண்டார். அவருக்கு அதிபா ஷி ஜின்பிங் வாழ்த்து தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டத்தில், ஷி ஜின்பிங் மூன்றாவது முறையாக அதிபராக தொடாவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. மொத்தம் உள்ள 2,936 உறுப்பினாகளும் ஜின்பிங்குக்கு ஆதரவாக வாக்களித்து ஒருமனதாக தோவு செய்தனா என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமா பதவியிலிருந்து விலகும் லீ கெகியாங், 2012 அதிபா தோ்தலின்போது ஷி ஜின்பிங்கை எதிர்த்துப் போட்டியிட்டவா. ஜின்பிங் அதிபரான பின்னா, அவா சக்திவாய்ந்த தலைவராக உருவெடுத்த நிலையில், கடந்த ஆண்டே பிரதமா பதவியிலிருந்து விலக லீ கெகியாங் முடிவு செய்திருந்தார்.

மேலும், கடந்த ஆண்டு கரோனா பெருந்தொற்று பரவியபோது, நாட்டின் வாத்தக மையமான ாங்காயில் சுமாா இரு மாதங்கள் பொதுமுடக்கம் அறிவிக்கப்பட்டது.

அந்த நிலைமையை பிரதமா் லீ கெகியாங் கையாண்ட விதம் விமர்சனத்துக்குள்ளானது.

புதிய பிரதமராக தோவு செய்யப்பட்டுள்ள லீ கியாங், நாடாளுமன்ற கூட்டத்தொடரின் இறுதி நாளான திங்கள்கிழமை (மார்ச் 13) வருடாந்திர செய்தியாளா சந்திப்பு கூட்டத்தை நடத்தவுள்ளார். சீன பொருளாதாரத்துக்கு புத்துயிர் அளிக்கும் தனது

திட்டம் குறித்து லீ கியாங் அறிவிப்பாா என்பதால், அந்த செய்தியாளாகள் சந்திப்பு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஓய்வூதியக் கொள்ளையை எதிர்த்து பிரான்ஸில் சனியன்றும் போராட்டம்

பிரான்சில் ஓய்வூதியக் கொள்கைகளைச் சீர் செய்வதற்கு ஆட்சி எடுத்த முடிவை எதிர்த்து பல ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நாட்டின் நாடாளுமன்ற செனட் குழு சனிக்கிழமை பிற்பகல் நாட்டின் ஓய்வூதிய அமைப்பில் மேற்கொள்ளப்படவுள்ள சீர் திருத்தத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இதனை எதிர்த்தும் கண்டித்துமே போராட்டங்கள் வெடித்துள்ளன. சில இடங்களில் போராட்டக்காரர்கள் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டதுடன் பொதுச் சொத்துக்களும் எரிக்கப்பட்டன.

மாலையில் பதற்றம் வெடித்தது, சில எதிர்ப்பாளர்கள் பாதுகாப்புப் படையினர் மீது பொருட்களை வீசியதைத் தொடர்ந்து 32 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பாரிஸ் பொலிசார் கூறினர், குப்பைத் தொட்டிகள் எரிக்கப்பட்டன மற்றும் வீடுகளின் ஜன்னல்கள் உடைக்கப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டங்களில் 8 லட்சம் பேர் முதல் 10 லடசம் பேர் வரையில் கலந்துகொள்வார்கள் என்று பொலிஸார் எதிர்பார்த்தார்கள். ஆனால் 3 லட்சத்து 68 ஆயிரம் பேர் வரையிலானோரே பங்கேற்றனர் என்று உள்துறை அமைச்சகம் தெரிவித்தது.

இந்த ஓய்வூதியச் சீரமைப்புக்கு பிரான்ஸில் உள்ள முக்கிய தொழிற்சங்கங்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன. பிரதமர் மக்ரோனைச் சந்தித்துப் பேசுவதற்கு தொழிற்சங்கங்கள் இரண்டு தடவைகள் விடுத்த அழைப்பை அவர் நிராகரித்திருக்கிறார்.

இதையடுத்தே மக்கள் மீண்டும் வீதிகளுக்கு இறங்கினர். சனிக்கிழமை தலைநகர் பாரிஸில் மட்டும் 48,000 பேர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இதற்கு முன்னர் செவ்வாய்க்கிழமை நடந்த வேலைநிறுத்தப் போராட்டம் மற்றும் பேரணிகளில் 35 லட்சம் பேர் கலந்துகொண்டனர் என்று தொழிற்சங்கங்கள் அறிவித்தன. ஆனால், 13 லட்சம் பேரே அந்தப் பேரணிகளில் கலந்துகொண்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

செவ்வாயன்று கடைசி பெரிய வேலை நிறுத்தம் மற்றும் எதிர்ப்பு நாளில், காவல் துறையின் கூற்றுப்படி 1.3 மில்லியனுக்கும் குறைவான மக்களும், தொழிற்சங்கங்களின்படி மூன்று மில்லியனுக்கும் அதிகமான மக்களே கலந்துகொண்டனர்.

ஓய்வூதியச் சீர்திருத்தத்தின் தலையாய நடவடிக்கையானது, குறைந்தபட்ச ஓய்வூதிய வயதை 62இல் இருந்து 64 ஆக உயர்த்துகின்றது.

இது இளம் வயதிலேயே வேலை செய்யத் தொடங்கியவர்களுக்கு அநீதியாகப் பலரால் பார்க்கப்படுகிறது.



# கலிபோர்னியாவில் தொடரும் புயலால் பாதிப்பு அதிகரிப்பு

அமெரிக்காவின் கல்போர்னியா மாநிலத்தில் கடும் குளிருடன் கூடிய மற்றொரு கடுமையான புயல் சனிக்கிழமை வரை தாக்கியது. இதனால் ஆயிரக்கணக்கானவர்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்தப் புயலில் குறைந்தது இரண்டு பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே கலிபோர்னியாவில் தொடர்ந்து வீசிவரும் தொடர்ச்சியான கடும் குளிர் புயலினால் 13 பேருக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர். பெப்ரவரி 26 முதல் மார்ச் 8 வரையான நாள்களுக்குள் இந்த இழப்புக்கள் நிகழ்ந்துள்ளன.

இந்தச் சூழ்நிலையைத் தவிர்க்கவும் தடுக்கவும் முடியும் என்றுநாங்கள் நம்புகிறோம், ஆனால் நள்ளிரவில் பஜாரோ ஆற்றின் மேலடுக்கு மற்றும் மதகு உடைந்து மோசமான சூழ்நிலை வந்துவிட்டது என்று மான்டேரி கவுண்டி மேற்பார்வையாளரான லூயிஸ் அலெஜோ சனிக்கிழமை தெரிவித்தார்.

புயல் மற்றும் மழை வெள்ளத்தால் சில இடங்களில் சாலைகள் அள்ளிச் செல்லப்பட்டுள்ளன. பாலங்கள், மதகுகளும் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இதனால் போக்குவரத்துப் பாதிக்கப் பட்டுள்ளது.

வழக்கத்திற்கு மாறாக தீவிரமான மற்றும் முடிவில்லாத தொடர் புயல்கள் கலிபோர்னியாவை பல வாரங்களாக நீடிக்கின்றன என்று அதிகாரிகள் கூறுகின்றனர்.

கலிபோர்னியா எங்கள் மாநிலத்தைத் தாக்கும் இடைவிடாத மற்றும் கொடிய புயல்களிலிருந்து சமூகங்களைப் பாதுகாக்க எங்களிடம் உள்ள ஒவ்வொரு கருவியையும் பயன் படுத்துகிறது என்று ஆளுநர் கவின் நியூசோம் கூறினார்.

# கிளர்ச்சியாளர்களுடன் யேமன் அரசு பேச்சு

## கைதிகள் விடுவிப்புத் தொடர்பில்

யேமன் அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் கைதிகளைப் பரிமாறிக் கொள்வது தொடர்பான பேச்சு சனிக்கிழமை ஜெனீவாவில் தொடங்கியுள்ளது.

யேமன் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் ஈரான் ஆதரவு ஹூத்தி கிளர்ச்சியாளர்களின் பிரதிநிதிகள் என இரு தரப்பினரும் இந்தப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர். முன்னதாக இரு தரப்பையும் தீவிரமான பேச்சுக்களில் ஈடுபடவேண்டும் என்று ஐ.நா. வலியுறுத்தியிருந்தது.

பலவருட உள்நாட்டுப்போருக்கு முடிவுகட்டும் என்று நம்பப்படும் இந்தப் புதிய சுற்று மூடிய கதவு பேச்சுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியன அனுசரணை வழங்குகின்றன.

முடிந்தவரை கைதிகளை விடுவிப்பது குறித்து உடன்படுவதற்கு இரு தரப்பினரும் தயாராக இருப்பதாக நான் நம்புகிறேன் என்று யேமனுக்கான ஐ.நா.வின் சிறப்பு தூதர் ஹான்ஸ் கிரண்ட்பெர்க் ஒரு அறிக்கையில் தெரிவித்தார்.

இந்த பேச்சுவார்த்தை 11 நாட்கள் நீடிக்கும் என்று கூறப்படுகிறது,

2020ஆம் ஆண்டில், 1,050க்கும் மேற்பட்ட கைதிகள் விடுவிக்கப்பட்டனர் மற்றும் இருதரப்பும் செய்துகொண்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அவர்கள் பிறந்த பகுதி அல்லது சொந்த நாட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டது.

இந்தப் பேச்சுக்களின் மூலம் 823 அரசு சார்பு போராளிகளுக்கு ஈடாக 1,400 கிளர்ச்சியாளர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# மத்தியூஸின் அபார சதத்தால் மீண்டெழுந்தது இலங்கை அணி

## எனினும் நியூஸி வெல்ல வாய்ப்புண்டு





நியூஸிலாந்து அணியுடனான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாவது இன்னிங்ஸிலும் இலங்கை அணி போராட்டத்தை வெளிப்படுத்தியது. முதலில் தடுமாறினாலும் ஆஞ்சலோ மத்தியூஸின் சதத்துடன் 300 ஓட்டங்களை மீண்டும் கடந்தது இலங்கை.

மூன்றாம் நாள் முடிவில் 83 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து தடுமாறிய இலங்கை அணி நான்காம் நாள் தொடங்கியதும் சுதாகரித்து நிமிர்ந்தது. ஆஞ்சலோ மத்தியூஸ் அதற்கு சிறப்பான அடித்தளம் இட்டார்.

நான்காம் நாளை மததியூஸ் 20 ஓட்டங்களுடனும் பிரபாத் ஜெயசூரிய 2 ஓட்டங்களுடனும் தொடங்கினர். பிரபாத் 4 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் தொடக்கத்திலேயே ஆட்டமிழந்தார்.

ஓவ் ஸ்டம்புக்கு வெளியே அளவுக்குச் சற்றுக் கூடுதலாகப் பதிந்த பந்தை ஜெயசூரிய குத்திவிடப்பார்க்கிறார் பந்து மட்டையைச் சிராய்த்துக்கொண்டு காப்பாளர் கைகளில் அடக்கமாகி விடுகிறது.

ஆட்டமிழப்பு வழங்கப்பட்டு விடுகிறது. முடிவில் ஜெயசூரியவுக்குத் திருப்தியில்லை. ஆனால், பின்வரிசை வீரருக்காக ரிவியூ வாய்ப்பை வீணடிக்க இலங்கைக்கும் மத்தியூஸுக்கும் விரும்பமில்லை. எனவே ஜெயசூரிய வெளியேறினார். அணி 95 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்திருந்தது.

தொடர்ந்து மத்தியூஸுடன் இணை சேர்ந்தார் டினேஸ் சந்திமல் சிறப்பாக ஆடினார். அவரைத் தொடர்ந்து தனஞ்சய டி சில்வாவும் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இருவருமே அரைச் சதத்தை சொற்ப எண்ணிக்கையில் தவறவிட்டனர். ஆனால் இருவரும் மத்தியூஸுக்கு பக்கபலமாக நின்றனர்.

சந்திமல் 42 ஓட்டங்களையும் (2 பவுண்டறிகள்)தனஞ்சய 7 பவுண்டறிகள் அடங்கலாக 47 ஓட்டங்களையும் பெற்றனர். இலங்கை வீரர்களின் ஆட்டம் மிக நிதானமாக இருந்தது. சந்திமல் 107 பந்துகளிலும் தனஞ்சய 73 பந்துகளிலும் இந்த ஓட்டங்களைப் பெற்றனர். இலங்கை வீரர்களின் ஆட்டம் வெகு நிதானமாக இருந்தது. இரண்டாவது இன்னிங்ஸில் அவர்கள் ஒரேயொரு சிக்ஸர்கூட அடிக்கவில்லை.

மத்தியூஸ் – சந்திமல் இணை 105 ஓட்டங்களையும் மத்தியூஸ் – தனஞ்செய இணை 60 ஓட்டங்களையும் பெற்றது. சந்திமலின் ஆட்டமிழப்பைத் தொடர்ந்து மத்தியூஸ் நிலைத்து ஆடினாலும் சதத்தைப் பூர்த்தி செய்த கையோடு எதிர்பாராத விதமாக "ஜஸ்ட் லைக் தட்" ஆட்டமிழந்து வெளியேறினார். 235 பந்துகளில் 11 பவுண்டரிகளுடன் 115 ஓட்டங்கள் குவித்தார்.

தொடர்ந்து வந்த பின்வரிசை வீரர்கள் எவரும் தனஞ்சயவுக்குப் பக்கபலமாக நின்றாடவில்லை. அடுத்தடுத்த அனைவரும் ஆட்டமிழக்க 302 ஓட்டங்களுக்கு இலங்கையின் இரண்டாவது இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. பிளயர் டிக்னர் 4 இலக்குகளையும் மட் ஹென்றி 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

தேனீர் இடைவேளையின்போது 251 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்த இலங்கை அணி அடுத்த சிறிது நேரத்திற்குள் மீதி 5 இலக்குகளையும் இழந்தது.

மீதமிருந்த நேரத்தில் ஆஸி. அணி துடுப்பெடுத்தாடி 1 இலக்கு இழப்புக்கு 28 ஓட்டங்களைப் பெற்றது. இன்று ஆட்டத்தின் இறுதி நாள். நியூஸிலாந்து அணி இன்னும் 257 ஓட்டங்களைப் பெறவேண்டும். இலங்கைப் பந்துவீச்சாளர்கள் திறம்படச் செயற்பட்டாலன்றி ஆட்டத்தை நியூஸிலாந்து அணி வெற்றி கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.

# டெல்லிக்கு மற்றொரு வெற்றி

நடப்பு மகளிர் ப்ரீமியர் லீக் சீசனின் 9ஆவது லீக் போட்டியில் குஜராத் ஜெயண்ட்ஸ் அணியைத் துவம்சம் செய்தது டெல்லி கேபிடல்ஸ் அணி. பந்துவீச்சு, துடுப்பாட்டம் என அனைத்திலும் குஜராத் அணியை வெளுத்து வாங்கியது டெல்லி. டெல்லி அணிக்காக பாலி வர்மா, 28 பந்துகளில் 76 ஓட்டங்கள் குவித்தார். 10 பவுண்டரி மற்றும் 5 சிக்ஸர்கள் இதில் அடங்கும். அவரது ஸ்ட்ரைக் ரேட் 271.43.

இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற குஜராத் அணி பேட்டிங் தேர்வு செய்தது. அந்த அணி பவர் பிளே ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. அதுவும் முதல் 28 பந்துகளில் 28 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து 5 விக்கெட்டுகளை இழந்திருந்தது. இருந்தும் 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 105 ஓட்டங்களை எடுத்தது குஜராத்.

டெல்லி அணிக்காக பந்து வீசிய மரிசேன் கேப், 5 விக்கெட்டுகளை கைப்பற்றி இருந்தார். ஷிகா பாண்டே, 3 விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார். ராதா யாதவ், ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

106 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை டெல்லி விரட்டியது. அந்த அணியின் தலைவர் மெக் லேனிங் மற்றும் பாலி வர்மா இன்னிங்ஸை தொடங்கினர். 7.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 107 ஓட்டங்களை எடுத்தது டெல்லி. அதன் மூலம் 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மரிசேன் கேப், பிளேயர் ஆப் தி மேட்ச் விருதை வென்றார்.

# கவாஜாவின் புதுப் புது சாதனைகள்

அகமதாபாத் டெஸ்ட்டில் ஆஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 480 ஓட்டங்களைக் குவிக்க உஸ்மான் கவாஜா 180 ஓட்டங்களைக் குவித்தார்.

இதனை அவர் 611 நிமிடங்களில் 422 பந்துகளில் எடுத்தார். 21 பவுண்டரிகள் மட்டுமே. மற்ற ஓட்டங்களெல்லாம் ஓடி எடுத்தது.

கவாஜா துடுப்பெடுத்தாடிய 611 நிமிடங்கள் ஆஸ்திரேலிய வீரர் ஒருவர் இந்தியாவில் அதிக நேரம் களத்தில் நின்று துடுப்பெடுத்தாடிய சாதனையாக அமைந்தது.

இதற்கு முன்பாக ஆஸ்திரேலியா வீரர் கிரகாம் யாலப் 1979ஆம் ஆண்டு தொடரில் ஈடன் கார்டன்சில் 167 ஓட்டங்களை எடுத்தபோது 520 நிமிடங்கள் நன்று துடுப்பாடினார்.

அதேபோல் அதிகப் பந்துகளை சந்தித்ததிலும் கவாஜா சாதனை புரிந்துள்ளார். 422 பந்துகளைச் சந்தித்தார் கவாஜா.

இந்தியாவுக்கு வருகை தரும் அணிகளில் 3 வீரர்கள் மட்டுமே இதுவரை 10 மணி நேரத்துக்கும் மேல் துடுப்பாடியுள்ளனர். பாகிஸ்தானின் யூனிஸ் கான் 267 ஓட்டங்களை பெங்களூருவில் 2005இல் எடுத்தபோது 690 நிமிடங்கள் களத்தில் நின்றார். ஹஷிம் ஆம்லா, ஆட்டமிழக்காமல் 253 ஓட்டங்கள் பெற 675 நிமிடங்கள் எடுத்துக் கொண்டார். இது நாக்பூரில் 2010இல். இலங்கையின் மகேலா ஜெயவர்தனே 2009ஆம் ஆண்டு இதே அகமதாபாத்தில் 275 ஓட்டங்களை 610 நிமிடங்களில் எடுத்துள்ளார்.

இதோடு சென்னையில் மேத்யூ ஹெய்டன் 203, டீன் ஜோன்ஸ் 210, ராஞ்சியில் ஸ்டீவ் ஸ்மித் 178, கிரகாம் யாலப் 167 ஆகிய முன்னணி வீரர்கள் பட்டியலில் இந்தியாவில் அதிக ஓட்டங்கள் எடுத்து இணைந்துள்ளார் கவாஜா.



# கும்ளேயின் சாதனையை உடைத்த அஸ்வின்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 4ஆவது டெஸ்ட் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் ரவிச்சந்திரன் அஸ்வின் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இதன் மூலம் இந்தியாவில் 26வது முறையாக 5 அல்லது அதற்கு மேல் விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார் அஸ்வின். இதன் மூலம் அனில் கும்ப்ளே (25) சாதனையை உடைத்தார்.

உள்நாட்டில் முத்தையா முரளிதரன் 45 முறை ஒரு இன்னிங்சில்ல் 5 விக்கெட்டுகளையும் ரங்கனா ஹெறாத் 26 முறையும் எடுத்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 113 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார் அஸ்வின். கும்ப்ளே 111 விக்கெட்டுகளை எடுத்து இருந்ததை அஸ்வின் முறியடித்தார். நேதன் லயனுடன் பார்டர்–கவாஸ்கர் டிராபியில் அதிக விக்கெட்டுகளை எடுத்ததில் இணைந்துள்ளார் அஸ்வின்.

# முழு ஓய்வை அறிவித்த மார்ஷ்



முதல் தர கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ரான் மார்ஷ் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

பன்னாட்டுப்போட்டிகளில் இருந்து ஏற்கெனவே ஓய்வு பெற்றுவிட்ட முன்னணி வீரரான ஸான் மார்ஷ், மேற்கு ஆஸ்திரேலிய அணிக்காக தொடர்ந்து முதல் தர போட்டிகளில் விளையாடி வந்தார்.

22 ஆண்டுகள் விளையாடிய நிலையில் நேற்று அவர் ஓய்வு பெறுவதாக அறிவித் தார்.

முதல் தரப் போட்டிகளில் அவர் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓட்டங்களைக் குவித்துள்ளார்.

40 வயதாகும் ஷான் மார்ஷ், டெஸ்ட் போட்டிகளில் 2,265 ஓட்டங்களும், ஒரு நாள் போட்டிகளில் 2,773 ஓட்டங்களும் எடுத்துள்ளார்.

# கோலி சதம்: இந்தியா உறுதியான பதிலடி

*ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் இந்தியா 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 571 ஓட்டங்கள் குவித்தது. முதுகு வலி காரணமாக ஸ்ரேயஸ் ஐயர் இந்த இன்னிங்ஸில் பேட் செய்யவில்லை. இந்த இன்னிங்ஸில் விராட் கோலி, 186 ஓட்டங்கள் குவித்தார். முதல் இன்னிங்ஸில் இந்தியா 91 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.*

*இந்திய அணி துடுப்பாளர்கள் முதல் ஆறு விக்கெட் வரை 50 ஓட்டங்களுக்கும் கூடுதலாக இணைப்பாட்டம் அமைத்து அசத்தினர்.*

*இது டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதல் முறையாக படைக்கப்பட்டுள்ள சாதனையாகும்.*

*ரோகித் - கில் 74, கில் - புஜாரா 113, கோலி - கில் 58, கோலி - ஜடேஜா 64, கோலி - பரத் 84, கோலி - அக்சர் 162 ஓட் டங்கள் எடுத்து இந்தச் சாதனையைப் படைத்தனர்.*

*கே.எஸ்.பரத் 44 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த அக்சர் படேல், சிக்சர் மழை பொழிந்தார். 113 பந்துகளில் 79 ஓட்டங்கள் எடுத்தார்.*

*அதன் பின்னர் அஸ்வின், உமேஷ் யாதவ் மற்றும் கோலி ஆகியோர் தங்களது இலக்குகளை அடுத்தடுத்து இழந்தனர்.*

*தேநீர் நேர இடைவேளைக்கு பிறகு இன்னிங்ஸில் வேகத்தை கூட்டியது இந்தியா. தற்போது ஆஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கியுள்ளது. ட்ரேவிஸ் ஹெட் மற்றும் மேத்யூ குனேமன் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் கண்டனர். இலக்கு இழப்பின்றி 3 ஓட்டங்களைப் பெற்றுள்ளனர்.*

*நாளை இறுதி நாள். ஆஸ்திரேலியாவை அரைநாளுக்குள் ஆட்டமிழக்கச் செய்தால் இந்தியா வெற்றியை நினைத்துப் பார்க்கலாம்.*



# டிகேயை போல ஆட விரும்பும் வீராங்கனை

நடப்பு மகளிர் ப்ரீமியர் லீக் சீசனில் தினேஷ் கார்த்திக்கை போல அதிரடியாக ஆடி ஆட்டத்தை முடித்துக் கொடுக்க விரும்புவதாக தெரிவித்துள்ளார் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியின் வீராங்கனை ஸ்ரேயங்கா பாட்டீல். 20 வயதான சகலதுறை ஆட்டக்காரரான அவர், அதற்காக வேண்டி டிகேவை போலவே ரேம்ப் ஷாட் ஆடி பயிற்சி எடுத்து வருகிறாராம்.

டிகே பாணியில் ஆட்டத்தை வெற்றிகரமாக முடித்து வைக்க நான் விரும்புகிறேன். இதை நான் எனது சக அணியினரிடம் தொடர்ந்து சொல்லி வருகிறேன். அதற்கான வாய்ப்பு எனக்கு அமைய வேண்டும். அது நடந்தால் நிச்சயம் நான் டிகேவை போல ஆடுவேன். அவரது ஷாட்களை பிரதி எடுத்து நான் பயிற்சி செய்து வருகிறேன். அழுத்தம் மிகுந்த நேரத்தில் விளையாட நான் அதிகம் விரும்புவேன். கிரேஸ் ஹாரிஸின் ஆட்டம் அபாரமாக இருந்தது. எனக்கு பிடித்தது என ஸ்ரேயங்கா தெரிவித்துள்ளார்.

# யுபி மீண்டும் வென்றது

மகளிா ஐபிஎல் போட்டியின் 8ஆவது ஆட்டத்தில் யுபி வொரியாஸ் 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ரோயல் சேலஞ்சாஸ் பெங்களூரை (ஆர்சிபி) வெள்ளிக்கிழமை வென்றது.

இத்துடன் 3 ஆட்டங்களில் விளையாடியிருக்கும் யுபிக்கு இது இரண்டாவது வெற்றியாகும். மறுபுறம் 4 ஆட்டங்களில் களம் கண்ட பெங்களூா அனைத்திலுமே தோற்றிருக்கிறது.

இந்த ஆட்டத்தில் முதலில் பெங்களூர் 19.3 ஓவாகளில் 138 ஓட்டங்களுக்கு 10 விக்கெட்டுகளையும் இழந்தது. அடுத்து ஆடிய யுபி விக்கெட் இழப்பின்றி 13 ஓவர்களில் 139 ஓட்டங்கள் சோத்து வென்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது பெங்களூர். அதிகபட்சமாக எலிஸ் பெரி 6 பவுண்டரிகள், 1 சிக்ஸர் உள்பட 52 ஓட்டங்கள் சோக்க, சோஃபி டிவைன் 5 பவுண்டரிகள், 1 சிக்ஸா உள்பட 36 ஓட்டங்கள் சோத்தார். எஞ்சியோரில் கேப்டன் ஸ்மிருதி மந்தனா 4, கனிகா அஹுசா 8, ஹீதா நைட் 2, ஷ்ரேயங்கா பாட்டீல் 15, எரின் பான்ஸ் 12, ரிச்சா கோஷ் 1, ரேணுகா சிங் 3, சஹானா பவாா 0 என வீழ்ந்தனா.

சோஃபி எக்லஸ்டன் 4, தீப்தி சாமா 3, ராஜேஷ்வரி கெய்க்வாட் 1 இலக்கு கைப்பற்றினர்.

139 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு ஆடிய யுபி அணியில், தொடக்க இணையான தேவிகா வைத்யா – அணித் தலைவர் அலிசா ஹீலி ஆகியோரே இலக்கை இழக்காமல் அணியை வெற்றிக்கு வழி நடத்தினர். ஆட்டத்தின் முடிவில் அலிசா 47 பந்துகளில் 18 பவுண்டரிகள், 1 சிக்ஸா உள்பட 96, தேவிகா 5 பவுண்டரிகளுடன் 36 ஓட்டங்கள் அடித்திருந்தனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.03.2023 இல் வெளியிடப்பெற்றது.